ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும் மின்னிதழில் வாசிக்க eelanadu.ca முகநூலில் நாளாந்தச் செய்திகள்!

வீடு வாங்க விற்க நம்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL



மலர்:- 31, 13 டிசம்பர் 2024 இதழ்:- 28

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! தாயகத்தில் மாரி மழையுடன் சேர்ந்து பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளை உணவுப் பொருட்கள் மற்றும் உடை, போர்வை போன்ற அத்தியாவசிய தேவை அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில் களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்கு வதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd,
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


## கிளிநொச்சியில் கஜேந்திரகுமார் செல்வம் விசேட சந்திப்பு!

## ஸ்ரீதரனைப் பிரேரித்தார் கஜேந்திரகுமார்! துளிக்கும் உறவு?

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையில் கடந்த 10 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் அவசர சந்திப்பு இடம் பெற்றுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் (6ம் பக்கம் பார்க்க)




GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED


## தமிழர்களுக்கான மனித உரிமை எது வரை?

எங்கள் உரிமைகள் எங்கள் எதிர் காலம் இப்போதே எங்கள் உரிமை' இது தான் இந்த ஆண்டுக்கான மனித உரிமைகள் தின வாசகமாகும். 1948ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் (3ம் பக்கம் பார்க்க)

# தன்னை "சேர்" என்று அழைக்குமாறு சத்தியமூர்த்தியை கட்டாயப்படுத்திய அர்ச்சுனாவின் தரம்கெட்ட செயல்!



## டாக்டர் அர்ச்சுனா எம்.பி மீது நீதிமன்றம் நடவடிக்கை?

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு குழப்பம் விளைவிக்க வருவாரெனின் வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (4ம்பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசிய சாராயக்கடை:- செய்கூலியும் சேதாரமும்!




KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487



THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representatives
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
21 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Simcoe St N. & Conlin Rd
Oshawa $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!
Sheppard Ave & Allen Rd
Toronto $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University
Neilson/Tapscott
Scarborough $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC
Kennedy Rd / Hwy 401
Scarborough $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!
Sheppard & Neilson
Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!
Simcoe St N/ Brittania Ave
Oshawa $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse
McLevin Ave & Morningside
Malvern $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement
Townline Rd & Shankel Rd
Oshawa $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407
Sheppard Ave E / Neilson Rd
Scarborough $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED
Church St N & Rossland Rd W
Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout
Church St N & Rossland Rd W
Ajax $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors
Kellough St/ Mcneil St
Innisfil $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen
Ninth Line/Donald Cousens
Markham $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital
Mara & King
Beaverton $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home
Finch Ave E/ Morningside Ave
FOR LEASE
Scarborough $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned
Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE
Scarborough $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


# வடமாகாணத்தில் மர்மக் காய்ச்சலால் 7 பேர் உயிரிழப்பு!

வடக்கு மாகாணத்தில் மர்மக் காய்ச்சல் காரணமாக 7 பேர் உயிரிழந்த நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக தேவையேற்படின் மாவட்டத்தின் ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலிருந்து ஆளணியினரைப் பெற்றுப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் ஆலோசனை வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் இதுவரை உயிரிழந்த நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறையினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் ஆளுநர் தொலைபேசியில் உரையாடினார்.

உயிரிழப்புக்கான காரணம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் மாதிரிகள் கொழும்பு மற்றும் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எலிக் காய்ச்சலாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் வேறு வைரஸ் தொற்றுக்களாகவும் இருக்கக்கூடும் என்ற நியாயமான சந்தேகங்கள் இருப்பதாகவும் அது தொடர்பான விவரங்களையும் ஆளுநரிடம் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து இரண்டு குழுக்கள் இன்றும், நாளையும் வருகை தரவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்த காய்ச்சலுக்குரிய தடுப்பு மருந்துகள் வேறு மாவட்டங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டு விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், அதே போன்று ஒரு தொகுதி மருந்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்தத் தடுப்பு நடவடிக்கைகளை மருத்துவத் துறையினர் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட ஆளுநர், மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலால் பாதிப்புறாத ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவிலிருந்து மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களைப் பெற்று அவற்றை வினைத்திறனுடன் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca**
**மின்னிதழ்**
**மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழர்களுக்கான மனித உரிமை எது வரை?

எங்கள் உரிமைகள் எங்கள் எதிர்காலம் இப்போதே எங்கள் உரிமை' இது தான் இந்த ஆண்டுக்கான மனித உரிமைகள் தின வாசகமாகும். 1948ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஜக்கிய நாடுகள் பொதுச் சபையால் உள்வாங்கப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது.

அதன் நினைவாகவே ஒவ்வோர் ஆண்டும் டிசெம்பர் மாதம் குறித்த தினம் நினைவு கொள்ளப்படுகின்றது. 2009இற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியல் நகர்வில் மனித உரிமைகள் என்னும் விடயம் புதிதாக உள்வாங்கப்பட்டது. புதிதாக என்று சொல்வதில் ஒரு விடயமுண்டு அதாவது, அதற்கு முன்னர் மனித உரிமைகள் என்னும் விடயம் ஈழ அரசியலில் ஒரு விடயமாக இருந்ததில்லை.

ஏனெனில் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்ட எந்தவோர் ஆயுத இயக்கமும் மனித உரிமைகளை மதித்ததில்லை ஆகக் குறைந்தது ஒரு பொருட்டாகக் கூட எடுத்ததில்லை. ஆனால் இறுதி யுத்தமானது, பல்லாயிரக்கணக்கான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் இறப்பில் முடிவுற்றதைத் தொடர்ந்தே, ஈழ அரசியல் மனித உரிமைக் கோரிக்கையாக உருமாறியது.

கடந்த பதினைந்து வருடங்களாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையை அடிப்படையாகக் கொண்டும், அங்கு வெளியாகும் பிரேரணைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டுமே ஈழ அரசியல் உயிர் வாழ்கின்றது. இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது ஜக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போர் வலயத்திலிருந்து ஐ.நா. பணியாளர்களை வெளியேறுமாறு கூறிய போது அனைவருமே வெளியேறி விட்டனர்.

ஓர் அரசு வெளியேறச் சொன்னால் அதன் பின்னர் சர்வதேச முகவர் அமைப்புக்கள் எவையுமே இருக்காது. இதுதான் அவர்களது நடைமுறை. ஜக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போதே அனைத்தும் நடந்து முடிந்தது. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கைக்கான ஜக்கிய நாடுகள் சபையின் பேச்சாளராக இருந்தவர், கோடன் வைஸ் ஆவார்.

இறுதிக்கட்ட யுத்தம் பற்றிய தனது அனுபவங்களை தொகுத்து, கூண்டு' என்னும் பெயரில், அவர் ஒரு நூலை எழுதியிருக்கின்றார். அந்த நூலின் முன்னுரையில், நான் எனது வீட்டின் மொட்டை மாடியிலிருந்து எனது அடுத்த நூலுக்கான குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருக்கின்றேன். என்னைப் போன்ற ஒரு வெளிநாட்டவரை இது போன்ற விடயங்கள் பாதிப்பதில்லை இது அடிப்படையில் அந்த மக்களுக்கான பிரச்சினையாகும்.

இவ்வளவு தான் ஒரு வெளிநாட்டவரின் எல்லை. இறுதி கட்ட யுத்தத்தின் போது இலங்கை விடயத்தில் ஜக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்தமை தொடர்பிலும் ஓர் அறிக்கை வெளியாகியிருக்கின்றது. அதற்கு தலைமை தாங்கியவரே அதிகம் ஜக்கிய நாடுகள் சபையை நம்பியிருக்காதீர்கள் என்று கூறியிருக்கின்றார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை ஒரு முறை கூறியிருந்தார

அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது, புவிசார் அரசியல் நலன்களாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுண்டு கிடக்கின்றது இதற்கு எனது சொந்த நாடான தென்னாபிரிக்கா கூட விதிவிலக்கல்ல என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கடந்த பதினைந்து வருடகால மனித உரிமைக் கோஷங்கள் தமிழ் மக்களின் வாழ்வில் சிறிய முன்னேற்றத்தைக் கூட ஏற்படுத்தவில்லை. இனியும் ஏற்படுத்துமா என்னும் கேள்வியுடன் தான் நாட்கள் நகர்கின்றன. இந்த விடயத்தில் வெளிநாட்டு முகவர் அமைப்புக்களை நம்பியிருப்பதை விட, இருக்கின்ற வாய்ப்புகள் என்ன என்பதை துல்லியமாக கணித்து கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் மட்டுமே ஈழத் தமிழர்கள் அவர்களின் அரசியலில் முன்னோக்கி பயணிக்க முடியும்.

# கோட்டா அரசு ஆசாத்அலியை கைது செய்தது சட்டவிரோதம் – உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

2021ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதன்படி, பிரதிவாதிகளுக்கு ரூ. 75,000 இழப்பீடாக மனுதாரருக்கு வழங்க வேண்டும்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் (CID) ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்து வரப்பட்ட சிறைக்கைதியொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார். நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார்என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை யாழ் நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு சிறையில் வாகனத்தில் இருந்து அழைத்து வரும் வேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தன்னை "சேர்" என்று அழைக்குமாறு சத்தியமூர்த்தியை கட்டாயப்படுத்திய அர்ச்சுனாவின் தரம்கெட்ட செயல்!



நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க வருவாரெனின், வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

10 டிசம்பர் 2024 இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தான் தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும், தன்னை சேர் என்று அழைக்குமாறும் கூறி எம்மோடு முரண்பட்டார். அவரை சேர் என்று அழைக்க முடியாது என்று பதிலளித்ததற்கு, என்னை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அகற்றுவேன் எனவும், நாடாளுமன்றத்திற்கு அழைத்து கேள்வி கேட்பேன் எனறும் கூறினார். அத்துடன் என்னை வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லுமாறு கூறினார். அத்தோடு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் உள்நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பம் விளைவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க முற்படுவராயின் அவர் வாசலிலேயே வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என குறிப்பிட்டுள்ளார்.

## உள்ளக விசாரணைகள் மீதான நம்பிக்கை சிதைவடைந்துள்ளது காணாமல் போனோரின் ஒன்றியம் தெரிவிப்பு!

உள்ளக விசாரணைகள் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ளது. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது கட்டாயமானது.



சட்டத்தின் சார்பில் ஏதும் நியாயம் கிடைக்கவில்லை. வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக காணாமல் போனோர் விவகாரத்துக்கு நிதி ஒதுக்கி பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வெற்றிக் கொள்ள வேண்டும் என காணாமல் போனோரின் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரட்டோ பெர்னாண்டோ வலியுறுத்தினார். சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'சர்வஜன நீதி' அமைப்பினால் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது, இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு காண்பதற்கு சகல பொறிமுறைகளும் காணப்படுகின்றன. காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், சட்டம் மற்றும் அரசாங்கம் உள்ளது. இருப்பினும் காலம் காலமாக காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. சர்வதேச விசாரணை பொறிமுறையா அல்லது தேசிய மட்டத்திலான உள்ளக விசாரணை பொறிமுறையா என்ற பிரச்சினை காணப்படுகிறது. உள்ளக விசாரணைகள் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ளது.

உண்மையை கண்டறிவதற்காக காணாமல் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. இருப்பினும் எந்த உண்மையும் இதுவரை வெளிக்கொண்டு வரப்படவில்லை.

காணாமல் போனோர் அலுவலகம் பற்றி மக்கள் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில் 15 ஆயிரம் பேர் மாத்திரமே அலுவலகத்தில் முறைப்பாடளித்துள்ளனர்கள். அவர்களில் 4 ஆயிரம் பேர் இராணுவத்தினர். காணாமல் போனார் எண்ணிக்கையும் முரண்பட்டதாக காணப்படுகிறது.

60 ஆயிரம் என்கிறார்கள், 1 இலட்சத்து 47 ஆயிரம் என்கிறார்கள், 27 ஆயிரம் என்கிறார்கள். ஆகவே உண்மையான தகவல்களும் பதியப்படவில்லை. காணாமல் போனார் அலுவலகத்தில் பதிவு செய்பவர்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் கொடுப்பனவுகளை வழங்கினால் பாதிக்கப்பட்டவர்கள் விபரங்களை பதிவு செய்வார்கள். (22ம் பக்கம் பார்க்க)




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அநுராவின் இந்திய விஜயத்தின் போது இராஜதந்திர பேச்சுக் குறித்து கூட்டு அறிவித்தல் வெளியிடப்படும்!

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் 3 நாட்கள் உத்தி யோகபூர்வ இந்திய விஜயத்தின் போது முக்கிய இருதரப்பு பேச்சு வார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

பேச்சுவார்த்தைகளின் போது அவதானம் செலுத்தப்படும் விடய ங்கள், எட்டப்படும் இணக்கப் பாடுகள் குறித்து டில்லியிலிரு ந்து கூட்டு அறிவித்தல் வெளி யிடப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு 10 டிசம்பர் 2024 செவ் வாய்கிழமை இடம்பெற்ற போது ஜனாதிபதியின் இந்திய விவகாரம் தொடர்பில் கேள்வியெழுப்பிய போது, அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க 15ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை 3 நாட்கள் உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டு இந்தியா செல்லவுள் ளார்.

அவருடன் வெளிநாட்டலுவல் கள் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் பிரதி நிதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்டோரும் இந்த விஜயத் தில் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையிலான இந்த உயர்மட்ட தூதுக்குழு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மு உள்ளிட்ட முக்கிய இராஜதந்திரி களை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளது. எனினும் இதன் போது அவ தானம் செலுத்தப்படவுள்ள விட யங்கள், கையெழுத்திடப்பட வுள்ள ஒப்பந்தங்கள் குறித்து டில்லியிருந்து கூட்டு ஊடக அறிவித்தல் விடுக்கப்படும்.

விஜயத்துக்கு ஓரிரு தினங்களு க்கு முன்னர் வெளிநாட்டலுவல் கள் அமைச்சினால் உத்தியோக பூர்வ ஊடக அறிவித்தல் வெளி யிடப்படும் என அமைச்சரவை பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் சுமந்திரன்

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலைக் கால தாமதமின்றி நடத்த வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு அடுத்த வருட இறுதி வரை காத்திருக்காமல், உள்ளூ ராட்சி மன்ற தேர்தல் நிறைவடை ந்த பின் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னதாக மாகாண சபைகளை முழு அதி காரத்துடன் இயங்கச் செய்வது முக்கியமானதாகும் எனவும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபை முறைமையை நீக்குவதற்கு எந்த வொருதீர்மானத்தையும் தற்போது வரை அரசாங்கம் எடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜய திஸ்ஸ கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.



புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு மூன்று வருடங்கள் வரை செல்லும். எனவே, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற முறைமை தொடர்பில் தமது பரிந்துரைந்து களை அனைவரும் முன்வைக்க லாம்.

இதுதொடர்பில் கலந்துரையாடல் கள் நடத்துவதற்கு போதிய கால அவகாசம் உள்ளது. எனவே, மாகாண சபை முறையை ஒழிப்ப தற்கு அரசாங்கம் எந்தவொரு தீர்மானத்தை இதுவரை எடுக்க வில்லை.

மாகாண சபை முறைமை புதிய அரசியலமைப்பில் தொடர்ந்தால் தற்போது இருக்கும் அதிகாரங் களுக்கு அப்பாலான அதிகாரங்கள் வழங்கப்படாது எனவும் தற்போ தைய அதிகாரங்கள் குறைக்கப் படாது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திரு ந்தமை குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் அர்ச்சுனா எம்.பி மீது நீதிமன்றம் நடவடிக்கை?



யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாத னுக்கு எதிராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப் பாளர் அளித்த முறைப்பாடு தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித் துள்ளது.

இது குறித்து தகவல் அளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம், யாழ். நீதிவான் நீதி மன்றுக்கு இந்த விசாரணைகள் தொடர்பில் முதல் தகவல் அறிக்கை ( பீ அறிக்கை) சமர்ப் பிக்கவும் யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த 09 டிசம்பர் 2024 திங்கட்கிழமை முற்பகல் யாழ். பொலிஸ் நிலையம் சென்றுள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்திய மூர்த்தி, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பா ளரின் அலுவலகத்துக்குள் பாராளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் அத்துமீறி நுழை ந்து தன்னை திட்டி, அச்சுறுத்திய தாக' முறைப்பாடளித்துள்ளார்.

வைத்தியசாலையின் ஊழியர்களை மையப்படுத்திய நிர்வாக நடவடி க்கை தொடர்பில் அர்ச்சுனா எம்.பி. தகவல்களை கோரிய போது அவற்றை வழங்க பணிப் பாளர் மறுத்துள்ள நிலையிலேயே, அவரை திட்டி இந்த அச்சுறுத்தல் நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு ஊடாக வெளிப்படு த்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.சி.ஏ. தனபாலவின் உத்தரவில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, சிரே ஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜய மஹவின் நேரடி கட்டுப்பாட்டில், யாழ். பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரி தலைமையிலான குழுவின் இந்த விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

# மதுபானசாலை அரசியல்

வடக்கு, கிழக்கில் வழங்கப்பட்ட மதுபானசாலை களுக்கான அனுமதி தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு, தமிழ் அரசு கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சாணக்கியன் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியிருந்தார். சரி நாங்கள் நாளையே வெளியிடுகின்றோம் என்று அரசாங்க அமைச்சரும் தெரிவித்திருந்தார்.

அதன்படி எந்த மாவட்டத்துக்கு எத்தனை மது பானசாலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்னும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. வடக்கு, கிழக் கில் வரலாற்று ரீதியாக வாழ்ந்துவரும் ஈழத் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் இருப்புக்கான தீர்வு மற்றும் தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக் கும் பல்வேறுவிதமான பிரச்னைகள் தொடர்பில் குரல் எழுப்பி வந்த, தமிழ் (தேசிய) அரசியல்வாதி கள் இன்று வடக்கு, கிழக்கிற்கு எத்தனை மது பானசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது, அதனை யாருக்கு வழங்கினார்கள் என்னும் தகவல் களை கோரி வருகின்றனர்.

தங்களுக்குள் இருக்கும் சிலரை தோற்கடித்து, அவர்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டுவதற்காகத் தான் அதனையும் கோருகின்றனர் மக்களின் நன்மைக்காக அல்ல ஏனெனில் தேர்தல் காலத்தில் தங்களின் வெற்றிக்காக அரசியல்வாதிகள் மது பானம் வழங்குவதையும் மக்கள் அறிவார்கள். உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதி கள், இன்று மதுபான சாலைகள் தொடர்பில் பேசும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்றால் இது யாருடைய கெட்டித்தனம். ரணில் விக்கிரம சிங்க அதிகார அரசியலிலிருந்து வெளியேறினாலும் கூட, அவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அதிர்வு களிலிருந்து தமிழ் அரசியல்வாதிகளால் இன்னும் விடுபட முடியவில்லை தள்ளாடிக் கொண்டிருக் கின்றனர்.

மதுபான சாலைகள் தொடர்பான விவரங்கள் எதற் காக கேட்கப்படுகின்றன? ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமிழ் அரசியல் வாதிகளை தங்கள் பக்கம் எடுக்கும் நோக்கில் சலுகையாக, மதுபான சாலை களுக்கான அனுமதிப் பத்திரங்களை ரணில் வழங்கியிருக்கின்றார். அது ஒரு வகையில் அரசி யல் கையூட்டுத் தான். ஆனால் இலங்கைத் தீவின் அதிகார அரசியலில் இவ்வாறான அரசியல் கையூட்டுக்கள் முதலும் அல்ல அதேபோல் இறுதி யுமல்ல. நாடாளுமன்ற தேர்தல் பிரசார காலத்தில் மதுபானசாலைகள் தொடர்பான தகவல்களை வெளியிடப் போவதாக அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருந்தார்.

ஆனால் வடக்கு, கிழக்கில் குறித்த மதுபான சாலைகளை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்னும் தகவல் ஆதாரபூ ர்வமாக இதுவரை யில் வெளியிடப்படவில்லை. ஒரு வகையில் ரணி லின் தந்திரத்தை இன்னொரு வகையில் அநுர தொடர்கின்றார் போன்றே தெரிகின்றது. அநுர குமார திஸநாயக்க எண்ணினால் குறித்த விவரங் களை வெளியிடுவது சாதாரண விடயம். ஆனா லும் குறித்த சில தமிழ் அரசியல்வாதிகள், தங்களு டைய எதிர்கால நகர்வுகளுக்கு தேவைப்படலாம் என்பதாலேயே, அநுர குமார விடயங்களை வெளிப் படுத்தாமல் தாமதித்து வருகின்றார்.

அநுர இந்த விடயத்தில் தாமதிப்பதை அல்லது தவிர்ப்பதை வேறு எந்த அடிப்படையில் விளங்கிக் கொள்வது? மதுபானசாலைகள் தொடர்பில் தமிழ் தேசியம் பேசும் அரசியல் வாதிகள் அடிக்கடி பேசுவதானது, தமிழ் சமூகத்துக்கு பெருமையல்ல உண்மையில் சிறுமை. பல்லாயிரக்கணக்கான உயிர்களை முதலீடு செய்து, கட்டிக்காப்பாற்றிய தமிழர் விடுதலை அரசியலானது, இன்று எந்த இடத்தில் வந்து நிற்கின்றது? ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய திட்டங்கள் தொடர் பில் சிந்திக்க வேண்டிய தமிழ் மக்களின் பிரதிநிதி களை மதுபானத்திற்குள் முடக்கியிருப்பதும் கூட, சிங்கள இராஜதந்திரத்தின் வெற்றி தான்.

# இன்னும் 300 மதுபான உரிமங்களை வழங்க ரணில் முடிவு செய்திருந்தாராம்

கடந்த அரசாங்கத்தின் போது வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் எவையும் இரகசியமானவை அல்ல எனவும், அடுத்த ஆண்டு இன்னும் 300 உரிமங்களை வழங்க ஏற்பாடு செய்திருந்தோம் என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் மதுபான அனுமதிப்பத்திரங்களை இலஞ்ச மாக வழங்கியதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்கும் அரசாங்கம் கட்டண த்தை அறவிட்டுள்ளது. அவை சட்டவிரோதமாக வழங்கப்பட வில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ இலஞ்சமாக மதுபான உரிமங்கள் வழங்கப்பட வில்லை. ஒவ்வொன்றும் 10, 15, 20 மில்லியனுக்கு விற்கப் பட்டது. நேரடி வரிகள் இல்லாமல் வருவாய் ஈட்டுவதற்கான வழிகள் இவை. இந்த அனுமதிப்பத்திரங்களில் அரசாங்கத்தின் வருமானத்தில் நான்கிலிருந்து ஐந்து பில்லியன் வரை சேர்த்திருக்கலாம். நான் ஏன் யாருக்கும் இலஞ்சம் கொடுக்க வேண்டும்? இவை எதுவும் இலவசமாக வழங்கப்படவில்லை.

சில எம்.பிக்கள் உரிமம் பெற சிலரை அனுப்பி வைத்தனர். ஆனால் நான் யாருக்கும் கொடுக்கவில்லை. அதனால் தான் யாரும் தனிப்பட்ட முறையில் பணம் சம்பாதிக்கவில்லை என்றார்.

# கிளிநொச்சியில் கஜேந்திரகுமார் செல்வம் விசேட சந்திப்பு!



தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதனுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம் பலத்திற்கும் இடையில் கடந்த 10 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் அவசர சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையில் குறித்த கலந் துரையாடல் இடம் பெற்றுள்ளது. குறித்த சந்திப்பு குறித்து நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

விசேடமாக அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பை கொண்டு வர உத்தேசித்துள்ள இச் சூழ் நிலையில் குறித்த அரசியல் அமைப்பை உறுதியாக அறிவித்துள்ள நிலையில், அதனை பாராளுமன்றத்தில் எவ்வாறு எதிர் நோக்கப் போகின்றோம் என்ற விடயம் குறித்தும், குறிப்பாக தமிழ் தேசிய மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், புதிய அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுகின்ற சந்தர்ப்பத்திலே எங்களுடைய நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாடு தொடர்பாகவும் கலந்துரையாட இந்த சந்தர்ப்பத்தை பயண்படுத்தி உள்ளோம்.


நாங்கள் ஏற்கனவே அறிவித்தது போன்று பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் அவர்களுக்கு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை மையப்படுத்தி நாங்கள் இக் கலந்துரையாடலை நடத்த வேண்டும் என்பதை நாங்கள் கேட்டு இருந்தோம்.

அந்த வகையில் எமது தீர்வு திட்டத்தில் ஒரு பிரதியையும் வழங்கி மேலதிகமாக புது வருடத்தின் பிற்பாடு, நாங்கள் மீண்டும் கூடி தமிழ் மக்கள் பேரவையின் யோசனைகளை ஆழமாக ஆராய்வதற்கு நாங்கள் இனங்கியுள்ளோம்.

அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனோடும் இவ் விடயம் தொடர்பாக பேசி புதிய வருடத்தோடு மேலதிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க நாங்கள் யோசித்து இருக்கின்றோம்.

அந்த சந்திப்பு பேரவையினுடைய தீர்வு திட்டத்தை ஆழமாக ஆராய்வதற்கான சந்தர்ப்பத்தை தமிழரசுக் கட்சி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிவில் சமூக தலைவர்களையும் உள் வாங்கி மேலதிகமாக இவ்விடயத்தில் உள்வாங்கப்பட வேண்டிய விடையங்களை நாங்கள் வருகின்ற ஒரு சில நாட்களில் சிறிதரன் எம்.பி யோடும் பேசி முடிவு எடுப்போம் என்றார்.

## மஹிந்தாவின் 116 பாதுகாவலர்கள் நீக்கம்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை நீக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கொள்கை மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கிய கடிதம் மூலம் பிரதி பொலிஸ் மா அதிபர் (மனித வள முகாமையாளர்) அறிவித்துள்ளதாக சட்டத்தரணி ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அந்தப் பாதுகாப்புப் பிரிவில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக மொத்தமாக 60 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, அதிக பட்சமாக நாளொன்றுக்கு 20 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுதத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை கடற்படையின் 74வது ஆண்டு நிறைவு விழாவை பெருமையுடன் கொண்டாடப்படுகிறது. கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரையின் பேரில் 2,138 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படை அதிகாரிகளுகக் பதவி உயர்வு வழங்கப்பட்டு ள்ளது.

இது இவ்வாறிருக்க வீடு ஒன்றுக்குள் புகுந்து, குடியிருப்பாளர்களை அச்சுறுத்தி, பொலிஸ் அதிகாரிகளைப் போல ஆள்மாறாட்டம் செய்து சொத்துக்களை நாசம் செய்த நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு, 19 வருடங்களின் பின்னர் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. அம்பாறை நீதவான் லுஸாக குமாரி தர்மகீர்த்தி இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்



# இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் ஜஸ்மின் சூகா வலியுறுத்தல்




இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிராகத் தடைகளையும், நுழைவு அனுமதித் தடையையும் விதிக்குமாறு வலியுறுத்தி அதனுடன் தொடர்புடைய 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும், ஆவணங்களையும் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும், ஐ.நா. சபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் அனுப்பி வைத்திருக்கின்றது.

ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக் கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கி வரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டமானது, இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் விசா அனுமதி தடைகள் தொடர்பான 60 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப் பதிவுகளையும் கோரியிருக்கின்றது.

மனித உரிமைகள் தினத்தை யொட்டி தயாரிக்கப்பட்டிருக்கும் இக்கோரிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல், மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன.

# ஸ்ரீதரனைப் பிரேரித்தார் கஜேந்திரகுமார்! துளிக்கும் உறவு?

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு எதிர்க்கட்சித் தரப்பின் பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு இடையில் இடம் பெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவாகியுள்ளார்.

தன்னை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஜீவன் தொண்டமானை 11 இற்கு 10 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்தார். நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெற்ற தேர்தலில் அவர் வெற்றி பெற்றிருக்கின்றார்.

இதனிடையே அரசமைப்புக்





கவுன்ஸிலுக்கு எதிர்க்கட்சித் தரப்பின் பிரதிநிதியாக சிறீதரனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரேரித்திருந்தார். இதனியே ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஜீவன் தொண்டமான் போட்டியிட்டிருந்தார். இதேசமயம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற விவகாரக் குழுவுக்கான பொறுப்பை சாணக்கியனுக்கு வழங்குவதென தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்திருப்பதாக தெரியவருகின்றது.

# வாடகைக்கு காதலனைத் தேடும் பெண்கள்



பல ஆண்டுகளாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் குறிப்பிட்ட வயதிற்குள் எல்லாம் நடக்க வேண்டும், வயது தாண்டி போக கூடாது என்று சொல்லி வயதிற்கு ஏற்றவாறு சடங்கு, சுப நிகழ்ச்சிகள் சமூகத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், திருமண வயதை எட்டிய வியட்நாம் பெண்கள் திருமணத்தின் அழுத்தத்தை சமாளிக்க ஒரு வழியைக் கண்டு பிடித்துள்ளனர். இளம் பெண்கள் தங்களுக்கு பிடித்த காதலனை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் புதிய நடைமுறை தான் தற்போது வியட்நாமில் நடைபெற்று வருகிறது. திருமணம் செய்து கொள்ளும்படி பெற்றோர்கள் தொந்தரவு செய்வதால் தற்காலிகமாக அவர்களை சமாதானம் செய்வதற்காக பெரும்பாலான பெண்கள் இந்த வழியை பின்பற்ற தொடங்கி உள்ளனர்.

வடக்கு வியட்நாமை சேர்ந்த 30 வயதான பெண் ஒருவருக்கு காதலனை வீட்டிற்கு அழைத்து வருமாறு பெற்றோர் வற்புறுத்திய தன் காரணமாக வாடகைக்கு காதலனை அழைத்து சென்றுள்ளார். இதனை தொடர்ந்தே இந்த நடைமுறை அறிமுகமாகி உள்ளது.

அந்த வகையில், வாடகைக்கு சென்ற 25 வயதான நபர் கூறும் போது, ஒரு வருடத்திற்கும் மேலாக போலி காதலனாக வேலை செய்து வருகிறேன். தனது வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்காக ஜிம்மிற்குச் செல்வது, சமைக்கக் கற்றுக்கொள்வது மற்றும் பாடும் திறன் மற்றும் உரையாடல் திறன்களை மேம்படுத்துவது, தோற்றம் மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# அரசியலில் காலாவதியாதல்

ஒவ்வொரு பொருளுக்கும் காலாவதியாகும் காலம் உண்டு. அந்தப் பொருளின் பயன்பாடு என்பது அதன் பயன்பாட்டுக்கான கால எல்லைக்குள் மட்டும் தான். அதன் பின்னர் அந்தப் பொருள் என்ன தான் விலை மதிப்புள்ளதாக இருந்தாலும் அதற்கு எந்தப் பெறுமதியும் இருக்காது. இது பொருட்களுக்கு மட்டுமல்ல இலக்கியம், அறிவியல், தத்துவம், அரசியல் என அனைத்து துறைகளுக்கும் பொருந்தும்.

ஒரு குறிப்பிட்ட துறையில் ஒரு காலகட்டத்தில் முதன்மையானவர்களாக போற்றப்படுபவர்கள் பிறிதொரு காலத்தில் பொருத்தமற்றவர்களாகப் போகலாம் ஏனெனில் அவர்களால் கால மாற்றத்தை புரிந்து கொண்டு செயற்பட முடியாமல் போகும் போது, புதியவர்கள் அவர்களை தாண்டிச் சென்று விடுவர். பின்னர் இப்படியும் ஒருவர் இருந்தார். அவர் இந்தக் காலகட்டத்தில் இவ்வாறான விடயங்களை முன் வைத்தார் என்னும் வரலாற்றுப் பதிவு மட்டுமே மிஞ்சியிருக்கும்.

இந்த அடிப்படையில் தமிழர் உரிமை அரசியலை எடுத்து நோக்கினால், ஆரம்பத்தில் தமிழ் மிதவாதிகளால் வழி நடத்தப்பட்ட தமிழர் அரசியல் பின்னர் ஆயுத இயங்களினால் கட்டுப்படுத்தப்பட்டது. ஆங்கில எழுத்துக்களை முன்னுக்கும் பின்னும் போட்டு, முப்பத்தேழு இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஐந்து இயக்கங்களே பிரதான இயக்கங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய நான்கு இயக்கங்களும் 1990களில் ஆயுத விடுதலைப் போராட்டத்தை கை விட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டதாக அறிவித்தன.

ஈரோஸ் அமைப்பின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளோடு இணைந்து கொண்டது. இவற்றில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய இயக்கங்கள் விடுதலைப் புலிகளால் வழி நடத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அங்கம் வகித்தன. புளொட் இயக்கத்தின் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எப்) 2009இற்கு பின்னர் கூட்டமைப்பில் இணைந்து கொண்டது. கூட்டமைப்பின் அங்கமாக இருந்த காலத்தில் கூட, முன்னாள் ஆயுத இயங்கங்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டாலும் கூட தனித்துவமான அரசியல் கட்டமைப்பை இவர்கள் கொண்டிருக்கவில்லை.

பெயரளவிலான கட்டமைப்பு ஒன்றையே கொண்டிருந்தனர். இவர்களுக்கு வலுவான அரசியல் அடித்தளம் இல்லையென்பது கடந்த பொதுத் தேர்தலின் போது தெட்டத் தெளிவானது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் முன்னாள் ஆயுத அமைப்புக் களான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., டி.பி.எல்.எப். ஆகியவற்றின் தலைவர்கள் அரசியலில் காலாவதியாகி விட்டனரா என்னும் கேள்வியை இலகுவாக புறம்தள்ளிவிட முடியாது. ஏனெனில், இவர்களால் இன்றைய காலத்திற்கு ஏற்ற அரசியலை முன்னெடுக்க முடியாது. ஏனெனில், குறிப்பிட்ட ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்ற காலத்தோடு ஒப்பிட்டால் தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போன்ற பெயர்கள் காலாவதியாகி விட்டன.

இவ்வாறான பெயர்களில் இனியும் அரசியலை முன்னெடுக்கலாம் என்று எண்ணினால் அது ஓர் அரசியல் தவறாகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட இலக்கை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய இவ்வாறான இயக்கங்கள் இன்றைய ஜனநாயக அரசியலுக்கு எந்த வகையிலும் பொருத்த மானவை அல்ல. இலங்கை தமிழ் அரசு கட்சி புதிய சவால்களை எதிர் கொள்ளப் போதுமானதல்ல என்பதை புரிந்து கொண்ட போது தான், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்.

உண்மையில் இன்றைய சூழலில், பழக்கப்பட்ட ஒரு கட்சியென்னும் அடிப்படையில் தமிழ் அரசு கட்சி முதன்மையான ஒன்றாக நோக்கப்பட்டாலும் கூட, அரசியலை கையாளுதல் என்னும் அடிப்படையில், தமிழ் அரசுகட்சியும் அதன் பழைய முகத்தில் பொருத்தமற்ற ஒன்றுதான்.

எனினும் அவர்களுக்கு மக்கள் மத்தியில் கணிச மான ஆதரவு இருப்பதால் அவர்களை காலாவதி யாகிப் போனவர்கள் என்று வாதிட முடியாது. இன்றைய சூழலில், முன்னாள் ஆயுத இயக்கங் களாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் தொடர்ந்தும் அரசியலில் இயங்க விருப்பம் கொண்டால், தங்களை புதுப்பித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும் குறித்த கட்சிகளின் தலைவர்கள் தங்களின் பொறுப்புக்களை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டும். தங்களது கட்சிகளின் அடையாளத்தை புறம்தள்ளி, புதிய தோர் அடையாளத்திற்குள் உள்நுழைய வேண்டும்

உதாரணம் தமிழர் விடுதலைக் கூட்டணி. ஒரு கூட்டணியாக இயங்குவதென்று முடிவெடுத்தால் அதன் பின்னர் குறித்த கட்சிகள் அனைத்தும் உறை நிலைக்குச் செல்ல வேண்டும். ஒரு காலத்தில் தமிழ் அரசு கட்சி இருந்தது போன்று.

# நாட்டுக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது - அருண்ஹேமச்சந்திரா

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்பதில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருப்பதோடு அந்த அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடக்கப்பட்டு சர்வ ஜன வாக்கெடுப்பிற்கு விடப்படும் என்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.



புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையிலிருந்து ஆரம்பமாகுமா இல்லை முழுமையாக ஆரம்பத்திலிருந்தான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா என்றும், மூன்று ஆண்டுகள் காலம் தாழ்த்தப்படுகின்ற போது அச் செயற்பாட்டுக்கு எதிரான எதிர்ப்புக்கள் வலுவடையும் சவாலான நிலைமைகள் ஏற்பட்டால் அதனை எவ்வாறு கையாளவுள்ளீர்கள் என்றும் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் மேலும் தெரிவிக்கையில் 2015-2019 அரசாங்கத்தின் காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் இருந்து தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை மையப்படுத்திய புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம். அதனை நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டுள்ளோம்.

இருப்பினும் அந்த இடைக்கால அறிக்கையை விடவும் முற்போக்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமாக இருந்தால் நாம் அது பற்றி கலந்துரையாடுவதற்கு தயாராகவே உள்ளோம்.

எவ்வாறாக இருந்தாலும் 22திருத்தங்கள் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை என்ற விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எமது அமைப்பின் கொள்கைகளை மையப்படுத்திய விடயத்தினை முன்வைப்போம். அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதவில்லை. எமது முன்மொழிவுகள் தீர்வினை அடைவதற்கான ஒரு பயணப்பாதையாகும். சில தரப்பினர் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து அந்த வழியால் தீர்வினை அடையலாம் என்ற குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டில் அனைத்துப் பிரஜைகளும் சம அந்தஸ்துடன் சாந்தியும் சமாதானமுமாக வாழ வேண்டும். வளங்கள் சமமாக பகிரப்பட வேண்டும் என்பது தான் இலக்காக உள்ளது. அதனை அனைவரினதும் பங்களிப்புடன் அடைந்து கொள்வது தான் நோக்கமாக உள்ளது.

இதேநேரம், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றபோது 13 ஆவது திருத்தச்சட்டம் மட்டுமல்ல முதலாவது திருத்தத்திலிருந்து 22ஆவது திருத்தம் வரையில் அகற்றப்பட்டு அவற்றின் உள்ளடக்கங்களைக் கொண்டதொரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அதேநேரம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில் மாகாண சபை முறைமை நீக்கப்படாது. நாட்டில் யுத்தமொன்று இடம்பெற்றது. பல தசாப்தங்களாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினை நீடித்துக் கொண்டு(20ம் பக்கம் பார்க்கக)

# வடக்கு கிழக்கில் விசேட பொருளாதார மீட்சித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென கன்னி உரையில் டாக்டர் சத்தியலிங்கம் கோரிக்கை



தேசிய கொடியையும் தேசிய கீதத்தையும் மனதார ஏற்கவில்லை .ஆனால் மதிப்பளிக்கிறோம் என தமிழரசுக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தனது கன்னி உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாங்கள் எதிர்க்கட்சி என்ற பெயருடன் அமர்ந்துள்ளோம். ஆனாலும் அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து முற்போக்கான செயற்பாடுகளுக்கும் நாம் உங்களுடன் இருப்போம். சிறுபராயத்தில் இருந்தே ஆட்சியாளர்களுக்கு எதிரான மனநிலையுடன் வளர்ந்தவர்கள் நாங்கள்.

எனது தந்தை ஒரு பொதுநலவாதி, தனது வாழ்க்கை முழுவதும் தூய்மையான கம்யூனிசவாதியாக வாழ்ந்தவர். நான் அவரின் வளர்ப்பில் வந்ததால் இன,மத, குல வேறுபாடு எனக்கில்லை. ஆனால் இந்த நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையானவர்கள் அனைத்து விதத்திலும் இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் சமனாக நடத்தைப்படவில்லை என்ற எண்ணத்துடன் வளர்ந்தவர்கள். அதனாலோ என்னவோ எமது நாட்டின் தேசியகீதத்தையும் தேசியக் கொடியையும் நாங்கள் மனதார விரும்பவில்லை, ஆனால் மதிப்பளிக்கின்றோம். இந்த மனநிலை எனக்கு மட்டுமல்ல எனது வயதையொட்டிய இன்னும் பல ஆயிரக்கணக்கனவர்களுக்கு உள்ளது. ஆனால் அதை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இந்த நிலை ஏற்பட்டதையிட்டு பல சந்தர்ப்பங்களில் நான் மனவேதனை அடைந்துள்ளேன்.

நான் விரும்பும் தேசியகீதத்தையும் நான் விரும்பும் தேசியக்கொடியையும் எனது வாழ்க்கைக் காலத்திற்குள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு இந்த அரசினுடையது.

நான் சொல்ல விழையும் விடயத்தை நீங்கள் அனைவரும் புரிந்திருப்பீர்கள் என எண்ணுகிறேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தனது உரையில் சமாதானம் ஒவ்வோர் மனதிலும் இருந்து தொடங்கவேண்டும் என குறிப்பிட்டார்.

உண்மை, ஆனால் அதை எங்கிருந்து தொடங்கலாம் என்று சிந்தித்தால் அது உங்கள் பக்கத்திலிருந்து தான் தொடங்க வேண்டும் என நான் நினைக்கிறேன். யுத்தத்தால் இறந்த உறவுகளை வணங்கும் நினைவேந்தலுக்கு நீங்கள் தடை போடவில்லை, அது உங்கள் நல்லெண்ணத்தை காட்டுகிறது.

அதே நேரம் பல நூற்றுக்கணக்கான இறந்தவர்களின் உடல் புதைக்கப்பட்ட துயிலும் இல்லத்தில் இன்று இராணுவமுகாம் உள்ளது, இவ்விடத்தை விடுவிக்க நடவடிக்கை எடுத்து நல்லெண்ணத்தை காட்டுங்கள்.

அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்யுங்கள். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கு மனச்சாட்சியுடன் விடையை தேடுங்கள், அதனூடாக உங்கள் நல்லெண்ணத்தை காட்டுங்கள். மகாவலி — எல் வலயத்தில் மூவினமக்களிற்கும் காணிகளை பகிர்ந்தளியுங்கள்.

ஜனாதிபதி தலைமையில் வரும் அரசாங்கம் நாட்டில் காணப்படும் இருமுக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் என்ற நம்பிக்கையில் தான்.

முதலாவதாக இந்தநாட்டில் காணப்படும் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு இரண்டாவதாக பொருளாதார பிரச்சனைக்கான தீர்வு.

முதலாவது பிரச்சனைக்கு தீர்வு காணாமல் இரண்டாவதற்கு முழுமையான தீர்வொன்றை காண முடியாது.

ஜனாதிபதி தனது உரையில் அரசியல் தீர்வு தொடர்பாக பேசவில்லை என எமது உறுப்பினர்கள் சொன்னாலும், இரு தினங்களுக்கு முன்னரவ அவரை சந்தித்த போது அரசியல் தீர்வு விடயத்தில் தனது நேர்மையான நல்லென்னத்தை வெளிக்காட்டினார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்காலத்தில் புதிய அரசியல் யாப்பின் வரைபு தயாரிக்கப்பட்ட போது வழிநடத்தல் குழுவில் இருந்து மக்கள் விடுதலை முன்னணி தனது பங்களிப்பை வழங்கியிருந்தனர். அந்த முயற்சி தொடரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடன் சேர்ந்து முன்செல்ல நாங்கள் தயாராகவே உள்ளோம். பொருளாதார பிரச்சனை ஏற்பட காரணம் இடம் பெற்ற யுத்தம், நாட்டின் வளங்களையும் இந்த நாட்டிற்கு உள்ள சந்தர்ப்பங்களையும் பிரதிபலிக்கும் பொருளாதாரக் கொள்கை இன்மையாலம்.

ஆட்சியாளர்களினதும் சகபாடிகளினதும் ஊழல், துஸ்பிரயோகம், வீண் விரயம் யுத்தம் முடிவிற்கு வந்து 15 வருடங்களாகி விட்டது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மொத்த தேசிய வருமானத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பங்களிப்பு எவ்வளவு? இன்று எமது மக்களின் பொருளாதாரம் மிக நலிவடைந்துள்ளது.

15,000 மேற்பட்ட முன்னாள் போராளிகள், 75,000 விசேட தேவைகள் உள்ள மக்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் என சமூகத்தில் 1.:3 பகுதியினர் ஏனையவர்களின் உதவியின்றி சுயமாக எழுந்து நிற்க முடியாதவர்கள். எனவே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விசேட பொருளாதார மீட்சித்திட்டங்களை ஆரம்பிக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசிற்குள்ளது, அதற்கான முயற்சியில் உங்களுக்கு கை கொடுக்க நாங்கள் உள்ளோம்.

தொடர்ந்தும் நிவாரணத்தை நம்பி வாழும் மற்றவர்களில் தங்கிவாழும் சமூகத்தை உருவாக்கதீர்கள். அரசாங்கத்தாலும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்களை ஆராய்ந்து பாருங்கள். அவற்றில் வெற்றியடைந்த திட்டங்கள் எத்தனை?. தமது சொந்த உழைப்பில் வாழும் சமூகத்தை கட்டியெழுப்ப பொருளாதார திட்டங்களை தீட்டுங்கள்இவ்வாறான திட்டங்கள் வெற்றியடைய நாமும் உங்களுடன் சேர்ந்து உழைக்க ஆயத்தமாக உள்ளோம்

இறுதியாக நாங்கள் இந்த நாட்டின் பூர்வ குடியாக, ஒரு தேசிய இனமாக எங்களின் அடையாளங்களை பேணிக்கொண்டு ஒரு பன்முகத்தன்மை உள்ள வளமான நாட்டை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம் என தெரிவித்தார்.

# தமிழ்மக்களிடையே "மாற்று அரசியல் சக்தி" ஒன்று தேசிய மக்கள் சக்தி போன்று மேற் கிளம்ப வேண்டும்!

**- த.கோபாலகிருஷ்ணன்-**

வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி (யாழ் மாவட்டம்-03, வன்னி-02) அதிகப்படியான ஆசனங்களைக் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கைப் பற்றியிருப்பதால் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியம் தோற்று விட்டது என்றும், கிழக்கு மாகாணத்தில் அவ்வாறு நடைபெறாததால் (மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதிகூடிய 03 ஆசனங்களை வென்றுள்ளதால்) கிழக்கில் தமிழ்த் தேசியம் காப்பாற்றப்பட்டு விட்டது என்றும் ஊடகங்களில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. 'தமிழரசுவாதி'களும் இதனையே உரத்து வாசித்துக்கொண்டு திரிகிறார்கள்.

யதார்த்தபூர்வமாக இக் கருத்துக்கள் இரண்டுமே தவறானவை. வடக்கு மாகாணத்தில் தோற்கடிக்கப்பட்டவர்கள் போலித் தமிழ்த் தேசியவாதிகளே தவிர தோற்றது தமிழ்த் தேசியம் அல்ல. அதுபோல் கிழக்கு மாகாணத்தில் வென்று வந்துள்ளவர்களும் போலித் தமிழ் தேசியவாதிகளே தவிர வென்றது தமிழ்த் தேசியம் அல்ல. இங்கு வென்றது போலித் தமிழ்த் தேசியமே.

உண்மையான 'தமிழ்த்தேசியம்' என்பது ஒரு போதும் தோற்கடிக்கப்பட முடியாத கருத்தியல் (concept) ஆகும். தேர்தல் அரசியலுக்குமப்பால் தமிழ்த் தேசியத் தளத்தில் மக்களைத் திரட்டுகின்ற ஒரு முற்போக்கான 'மாற்று அரசியல் அணியே' இன்றைய தேவை.

கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை அரசியலைப் பொறுத்த வரை அது அஹிம்சைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்ட போதிலும் சரி பின்னர் தமிழீழத் தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்ட காலத்திலும் சரி-2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்ட இராஜதந்திர (?) அரசியலிலும் சரி அவற்றில் தத்துவார்த்தப் பலவீனங்களும் தவறான அணுகுமுறைகளும் அறம் சாராத செயற்பாடுகளும் இருந்திருக்கலாம். அவை விமர்சனங்களுக்கு உட்பட்டவை. இவை அரசியல் மற்றும் ஆயுத இயக்கத் தலைமைத்துவத்தின் தவறுகளால் விளைந்தவை.

ஆனால் மக்களைப் பொறுத்தவரை பல வகைப்பட்ட அழிவுகளுக்குள்ளாலும் கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக அரசியல் மற்றும் ஆயுத இயக்கத் தலைமைத்துவங்களின் சரி பிழைகளுக்குமப்பால் இப்போராட்டங்களின் பங்காளர்களாகத் தொடர்ச்சியாக இருந்து வந்திருக்கிறார்களென்றால் அதற்குக் காரணம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தாம் வாழும் நிலப் பரப்பில் தமது நிலம், மொழி, பண்பாடு, கலை இலக்கியங்கள், பொருளாதாரக் கட்டமைப்பு, சூழல் பாதுகாப்பு என்பவற்றைத் தாமே, எந்த விதமான அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாகாமல் சுயாதீனமாகப் பரிபாலனம் செய்து பாதுகாத்துப் பேணி வளர்த்தெடுத்துத் தமது அடையாளத்தையும் இருப்பையும் தக்க வைத்துக் கொள்ளும் வேணவாவினாலாகும். அந்த வேணவா நெஞ்சில் எப்போதும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டேயிருக்கும்.



இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட இலங்கை முழுவதிலும் தேசிய மக்கள் சக்தி பாரிய தேர்தல் வெற்றியை நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஈட்டியிருக்கிறதென்பதற்காகக் கடந்த எழுபத்தைந்து வருடங்களாகத் தமிழ் மக்களின் மனதில் உள்ள அரசியல் அபிலாசைகள் இலங்கைத் தேசிய நீரோட்டத்தில் 'இலங்கையர்' என்ற சொல்லாடலால் அவர்களை விட்டு அகன்று விடாது.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில், தமிழ் மக்களுடைய போராட்டத்தின் அறுவடையான-அதிகாரப் பகிர்வுப் பொறிமுறையான மாகாண சபை முறைமையை எக்காரணம் கொண்டும் இழப்பதற்கோ அல்லது பலவீனமடையச் செய்வதற்கோ அம்மக்கள் சம்மதிக்க மாட்டார்கள். மட்டுமல்ல, மாகாணசபை முறைமை முழு இலங்கை நாட்டிற்கும் பொதுவாக நடைமுறையிலிருந்தாலும் கூட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை நல்லதோ கெட்டதோ, இன மத வர்க்க பேத மற்ற-ஊழல் மோசடிகள் அதிகார துஷ்பிரயோகங்களற்ற-சட்டம் ஒழுங்கைப் பாரபட்சமின்றிப் பேணுகின்ற பொருளாதார சுபீட்சத்தைப் பெற்றுத் தரக்கூடிய அரச நிர்வாகத்தைக் கட்டமைக்கும் என எதிர்பார்க்கப்படும் தேசிய மக்கள் சக்தி என்றாலும் கூட தென்னிலங்கை அரசியல் கட்சியொன்றிடம் அது எவ்வளவு முற்போக்கானதாக இருந்தாலும் கூட ஒப்படைத்துவிடத் தமிழ் மக்கள் விரும்ப மாட்டார்கள்.

இதனைத் தேசிய மக்கள் சக்தி புரிந்து கொண்டு தான் தமது அரசியல் நடவடிக்கைகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் தொடரவும் வேண்டும். இது தான் உண்மையான முறைமை மாற்றம் ஆகும்.

தேசிய இனங்களின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரித்து நடப்பது தான் உண்மையான பண்பு மாற்றமாகும். தேசிய இனங்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளை இடதுசாரித்துவம் எப்போதும் அங்கீகரித்தும் வந்துள்ளது.

இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளைப் போல் வெறுமனே கட்சி அரசியலுக்குள் மூழ்கித் தவறிழைக்குமானால் தமிழ் மக்களின் மனதை அதனால் வெல்ல முடியாது போகும். அது கூறும் முறைமை மாற்றமும் அர்த்தமில்லாமல் ஆகிவிடும்.

தேசிய மக்கள் சக்தியினால் இன்று உச்சரிக்கப்படும் இலங்கைத் தேசியம் என்பது இதுவரை இலங்கைத் தேசியம் என்ற போர்வையில் நடைமுறையிலிருந்த பௌத்த சிங்கள ஆக்கிரமிப்புப் பேரினவாதத்திலிருந்து வேறுபட்டதாக மாறுபட்டதாக முற்போக்கானதாக இருக்கலாம். இது வரவேற்கக் கூடியதே. இதனை வேறுபடுத்தி விளங்கிக் கொள்வதற்காக 'முற்போக்குச் சிங்களத் தேசிய வாதம்' என அடையாளப்படுத்தி அழைக்கலாம். ஆனால், இந்த முற்போக்குச் சிங்களத் தேசிய வாதத்திற்குள் அது முற்போக்கானது என்பதற்காகத் தமிழ் தேசியம் கரைந்து காலவோட்டத்தில் காணாமல் போய் விடுவதைத் தடுத்தாக வேண்டிய தேவைகளும் தமிழ் மக்களுக்கு உண்டு.

முற்போக்குச் சிங்களத் தேசியமும் (சுதந்திர இலங்கையில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பௌத்த சிங்களப் பேரினவாதம் அல்ல) முற்போக்குத் தமிழ்த் தேசியமும் ('போலி'த் தமிழ்த் தேசியக் கட்சிகளால் தற்போது உச்சரிக்கப்படும் குறுந்தமிழ்த் தேசிய வாதம் அல்ல) தத்தம் தனித்துவமான தளங்களில் காலூன்றி நின்று கைகளைக் கோர்த்துக் கொள்வது தான் பலமிக்க இலங்கைத் தேசியத்திற்கு வழி வகுக்கும்.

இதனைச் சாத்தியப் படுத்தத் தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தி எழுந்தது போல் வடக்குக் கிழக்குத் தமிழர்களிடையே யையும் 'மாற்று அரசியல் சக்தி'யொன்று மேற்கிளம்ப வேண்டும்.

# அதிகரித்து வரும் குற்றங்களால் ஸ்காபரோ குடியிருப்பாளர்கள் பீதியடைந்துள்ளார்கள்



ஸ்கார்பரோ மற்றும் மார்க்கமில் உள்ள தமிழ் நகைக் கடைகளை குறிவைத்து வாகனத் திருட்டுகள் மற்றும் பகல்நேரக் கொள்ளைகள் சமீபத்தில் அதிகரித்திருப்பது குடியிருப்பாளர்கள் மற்றும் வணிக உரிமையாளர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. டிசம்பர் 6, 2024 அன்று கனேடிய தமிழ் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் பேசிய ஸ்கார்பரோ – ரூஜ் பார்க்கின் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள், கடுமையான பிணைமீட்புச் சட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தினார், "மீண்டும் மீண்டும் குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த நாள் அதே குற்றங்களைச் செய்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்த அழுத்தமான பாதுகாப்புச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் எதிர்வரும், செவ்வாய்கிழமை டிசம்பர் 17 ஆம் திகதியன்று மாலை 7:30 மணிக்கு மால்வெர்ன் குடும்ப வள மையத்தில் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டமொன்றை நடத்துகிறார். குடியிருப்பாளர்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டு தங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப் படுகிறார்கள். இப்பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக வாகனத் திருட்டு மற்றும் பிணை சீர்திருத்த இணை அமைச்சர், கிராஹம் மக்கிரெகர் மற்றும் 42 பிரிவின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள். பதிவுகளுக்கு: vijaythanigasalam.ca/townhall


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா - 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.


எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 டிசம்பர் 2024 - 13 டிசம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 04 டிசம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் 37வது ஆண்டு நினைவுநாள் 05 டிசம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு தினம் 29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 47வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழ கிழக்கு ஊரெழவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 47வது ஆண்டு நினைவு நாள் 17 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 19வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி திருநாவுக்கரசு

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களது 190வது ஆண்டு நினைவு தினம் 11 டிசம்பர் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புவனேஸ்வரி திருநாவுக்கரசு அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி




### அமரர் உயர்திரு V.K நாகராஜா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விட மாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 13 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு V.K.நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13,3வது ஆண்டு நினைவஞ்சலிகள்





### திரு வீரகத்தி கதிர்காமு

### திருமதி கதிர்காமு தங்கம்மா

பேராலை பளையைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளும் 08 டிசம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வீரகத்தி கதிர்காமு, திருமதி கதிர்காமு தங்கம்மா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாச்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 நவம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சரண்ராஜ் தர்சிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அட்சயன் சரண்ராஜின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அட்சயன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 நவம்பர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவகாமி ஜெயகௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி சுருதி சிவகாமியின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக செல்வி சுருதி சிவகாமி 30 நவம்பர் 2024 சனிக்கிழமை தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 டிசம்பர் 2024 புதன்கிழமை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 டிசம்பர் 2024 வியாழக்கிழமை யாழ்.நல்லூரைச் சேர்ந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



06 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சஜனுகா யாதவன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 டிசம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை பேராலை பளைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 13வது நினைவு தினமும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 3வது நினைவு தினமும் ஆகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் இணையர்களை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 டிசம்பர் 2024 புதன்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கட்டுவனை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி திருநாவுக்கரசு புவனேஸ்வரி அவர்களது 19வது ஆண்டு நினைவு தினமாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K.நாகராஜா அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



உ
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca
Facebook: Canada Sri Ayyappan Hindu Temple



## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்











## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்
## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



***Note: Please don't use phones inside the TEMPLE**

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

# தமிழ் நகைக்கடைகளில் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்தும் எதிர்காலப் பாதுகாப்புக்கள் குறித்தும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய சமூகக் கூட்டம்

அண்மைக்காலமாக வெகுவாக அதிகரித்து வரும் தமிழ் நகைக்கடைகளின் கொள்ளை சம்பவங்கள் குறித்தும் அதையொட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் போலீஸார், சட்டத்தரணிகள், மாகாண சபை உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகைக் கடை உரிமையாளர்கள், மற்றும் தமிழ் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்ட சமூகக் கூட்டம் 06 டிசம்பர் 2024 கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டது. நகைக்கடை கொள்ளைச் சம்பவங்கள் குறித்தும் அதன் தொடர்ச்சியாக பொலிசார் வந்து விசாரணை நடத்துவதாலும் இதற்குத் தீர்வு காண முடியாது. மாறாக நகைக்கடை உரிமையாளர்கள் தங்களது கடைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். கொள்ளையிடப்படும் தங்க நகைகளை இரகசியமாக வாங்கும் மாபியாக்களை இனம் காண வேண்டும், தங்கத்தை உருக்கும் பொற்கொல்லர்கள் அதனைத் தவிர்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக கொள்ளையர்களைக் கண்டவர்கள், தெரிந்தவர்கள் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் இவ்வாறு பல்வேறு தரப்பினரும் இணைந்தால் தான் இதற்கு ஒரு தீர்வைக் காணலாம் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.












கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





காணத் தயாராகுங்கள்!
Association of Past Business Owners of Sri Lanka
Canada
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
PRESENTS
12 வது ஆண்டில்
வர்த்தக தீபம்
2024
12TH ANNUAL
Winter Get-Together
AWARDS | DINNER | ENTERTAINMENT
தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்
Mega Tuners
K2B
மெகா ரியூநெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னனி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....
DEC 29 2024
SUNDAY
6:00 PM
SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3
வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
நாவிற்கினிய அறுசுவை உணவுகள்
கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
அன்பளிப்பு
$60
SOMA SATCHITHANANDAN
President
647.202.3234
SOTHY SELLA
Secretary
647.409.8966
KATHIRAVEL KARUNANANTHAN
Treasurer
416.970.3182
வல்லவர் தொழில் வர்த்தகத்துறை

# கஜனின் அழைப்பு!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவின் அடிப்படையில் ஏனைய கட்சிகளோடு இணைந்து செயல்படுவதற்குத் தான் தயாராக இருப்பதாக கஜேந்திரக்குமார் அறிவித்துள்ளார்.அந்த அழைப்பின் அடிப்படையில் அணமையில் யாழ்ப்பாணத்தில் சிறீதரனின் வீட்டில் இரண்டு கஜன்களும் சிறீதரனை சந்தித்திருக்கிறார்கள்.

முதலாவதாக இந்த நகர்வை வரவேற்க வேண்டும். ஏனென்றால் இது ஏதோ ஒரு அடிப்படையில் தமிழ் ஐக்கியத்துக்கான முயற்சி தான். நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுகளின் பின்னணியில் இந்த நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

என்பிபி அரசாங்கம் ஒரு யாப்பை மாற்றக்கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு யாப்பை அவர்கள் உருவாக்க முயற்சிக்கக்கூடும். அந்தத் தீர்வானது ஏற்கனவே 2015இல் இருந்து 18 வரையிலுமான காலப்பகுதியில் ஒரு புதிய யாப்பை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சிகளில் முன் வைக்கப்பட்ட எக்கிய ராஜ்ய என்ற தீர்வை அடிப்படையாகக் கொண்டதாக அமையலாம் என்ற சந்தேகங்களின் பின்னணியில் கஜேந்திரக்குமாரின் மேற்படி அறிவிப்பு வந்திருக்கின்றது.

அந்த யாப்புருவாக்க முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியும் உட்பட ஏனைய கட்சிகளும் பங்களிப்பைச் செய்தன. அது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வு என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறியது. அனுர அரசாங்கம் அந்த தீர்வு முயற்சியைத் தொடரலாம் என்ற சந்தேகம் இப்பொழுது உண்டு. எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் அவ்வாறு யாப்புருவாக்க முயற்சியை முன்னெடுக்கும் பொழுது தமிழ்த் தரப்பானது தன் எதிர்ப்பை வலிமையாக ஒற்றுமையாகக் காட்ட வேண்டிய ஒரு தேவை எழுந்திருக்கிறது. அந்த தேவையின் அடிப்படையில் தான் கஜனின் மேற்படி நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 15ஆண்டுகளாக ஐக்கிய முயற்சிகளில் பெருமளவுக்கு ஒத்துழைக்காத ஒரு கட்சி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தான். எனினும் முன்னணியும் ஈடுபாடு காட்டிய ஐக்கிய முயற்சிகளின் போது உருவாக்கப்படும் ஆவணங்களில், விட்டுக் கொடுப்பற்ற தமிழ் நிலைப்பாடுகளை எடுப்பதற்கும், அந்த ஆவணங்களின் கொள்கை ரீதியான தெளிவான சரியான நிலைப்பாடுகளை எடுப்பதற்கும் முன்னணி தான் அதிகம் பங்களிப்பை செய்வதுண்டு.

தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு முன்மொழிவு விடயத்திலும் முன்னணியின் உழைப்பு அதிகம் உண்டு. சிவில் சமூகமும் அரசியல் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு பேரவையாகும். அதன் இணைத் தலைவர்களில் ஒருவராக அப்பொழுது முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் இருந்தார். எனவே பேரவையின் முன்மொழிவுக்கு கனதி அதிகமுண்டு. அந்த முன்மொழிவை உருவாக்கும் பொழுது பேரவையில் அங்கம் வகித்த கட்சிகள் பின்னர் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கொண்டன. பேரவையும் செயலிழந்தது. பேரவையின் முடிவுக்கு முன்னணியும் ஒரு முக்கிய காரணம். எனினும் இப்பொழுது அந்த முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் ஒரு ஐக்கியத் தளத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னணி முன் வந்திருக்கிறது.

கஜன் அழைப்பு விடுத்திருப்பது பிரதானமாக இரண்டு தரப்புகளுக்கு. ஒன்று ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணி. மற்றது தமிழரசுக் கட்சி. இதில் ஜனநாயக தமிழ் தேசிய முன்னணியின் குறிப்பிட்ட சில கட்சிகள் ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவைக்குள் அங்கம் வகித்தன. தீர்வு முன்மொழிவை உருவாக்கும் நடவடிக்கைகளிலும் பங்களிப்பை நல்கின. அதேசமயம் அக்கட்சிகள் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இருந்தன. கூட்டமைப்பு ரணில் மைத்திரி அரசாங்கத்தோடு சேர்ந்து உருவாக்கிய எக்கிய ராஜ்ய என்ற வரைவுக்கும் அவை பங்களிப்பை வழங்கின.

அந்தத் தீர்வு முயற்சியில் தமிழ்த் தரப்பில் சுமந்திரன் தீர்மானிக்கும் சக்தியாகச் செயற்பட்டார். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் பொழுது அவர் அந்த தீர்வு முயற்சியை ஆதரித்துப் பேசியும் இருக்கிறார். அந்த யாப்புருவாக்க முயற்சியில் ஜேவிபியும் பங்காளியாக இருந்ததை அவர் ஒரு சாதகமான அம்சமாகச் சுட்டிக்காட்டியும் இருக்கிறார். எனவே இப்பொழுது கேள்வி என்னவென்றால், அனுர அரசாங்கமானது எக்கிய ராஜ்யவை மீண்டும் தூசுதட்டி எடுத்தால் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன? சுமந்திரனின் நிலைப்பாடு என்ன?



ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது, இந்தியாவின் கைக்கூலிகள், இந்தியா சொல்வதைக் கேட்டு நடப்பவர்கள் என்று திரும்பத் திரும்ப குற்றஞ்சாட்டி வந்திருக்கிறது. குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அக்கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்குள் அங்கம் வகித்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுவேட்பாளரை இந்தியாவின் சூழ்ச்சி என்று வர்ணித்தது.அதில் ஈடுபட்ட சிவில் சமூகத்தவர்களையும் முதுகெலும்பில்லாதவர்கள், இந்தியாவுக்கு ஊழியம் செய்பவர்கள் என்று வசை பாடியது. ஆனால் பொது வேட்பாளர் பெற்ற வாக்குகள் தேசியவாத வாக்குகளை என்று பின்னர் கஜேந்திரகுமார் ஒரு விளக்கமும் கொடுத்தார்.

இப்பொழுது மேற்படி கட்சிகளை பேரவையின் முன்மொழிவின் கீழ் ஒன்றிணையுமாறு அவர் கேட்டிருக்கிறார். ஆயின் அக்கட்சிகள் இப்பொழுது இந்தியாவின் பிடிக்குள் இல்லை என்று அவர் நம்புகிறாரா? ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் கஜேந்திரகுமாரின் அழைப்புக்கு உத்தியோகபூர்வமாக பதில் எதையும் கூறியிருக்கவில்லை

கடந்த 15 ஆண்டுகளில் ஐக்கிய முயற்சிகளுக்கு பெரும்பாலும் ஆதரவை வழங்காத ஒரு கட்சி இவ்வாறு அழைப்பு விடுத்திருப்பது சாதகமான ஒரு மாற்றம் தான். கடந்த 15ஆண்டுகளிலும் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை பெரும்பாலும் சிவில் சமூகங்கள் தான் முன்னெடுத்திருக்கின்றன. மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயரின் முன்முயற்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு சந்திப்பில் இருந்து தொடங்கி தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் பொதுக் கட்டமைப்பு வரையிலுமான பெரும்பாலான ஐக்கிய முயற்சிகளின் அனுசரணையாளர்களாக சிவில் சமூகங்களே செயற்பட்டிருக்கின்றன. தமிழ்மக்கள் பேரவை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி, பல்கலைக்கழக மாணவர்கள் தலையிட்டு உருவாக்கிய 13 அம்ச ஆவணம், 2021இல் ஐநாவுக்கு எழுதிய கூட்டுக் கடிதம், அதன்பின் இந்தியச் சிறப்பு முகாம்களில் இருக்கும் ஈழத் தமிழ் கைதிகளை விடுவிக்குமாறு கேட்டு தமிழக முதல்வருக்கு எழுதப்பட்ட கூட்டுக் கடிதம், கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்தியமை ஆகிய பெரும்பாலான ஐக்கிய முயற்சிகள் அனைத்தின் பின்னணியிலும் சிவில் சமூகங்கள் தான் அனுசரணை புரிந்தன.

அவ்வாறு மக்கள் அமைப்புகளின் அனுசரணையோடு உருவாக்கப்பட்ட ஒரு ஆவணத்தைத்தான் இப்பொழுது கஜேந்திரகுமார் ஒன்றிணைவுக்கான அடிப்படையாக எடுத்திருக்கிறார். இந்த முயற்சிகளின் நோக்கம் அனுர அரசு கொண்டு வரக்கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை தமிழ்த் தரப்பு ஐக்கியமாக எதிர்கொள்வதே.

அது நல்ல விடயம். அதைப் பாராட்ட வேண்டும். ஆனால் அந்த ஆவணத்தை உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை இப்பொழுது இல்லை. அது செயல்படாத ஐந்தாண்டு கால இடைவெளிக்கு பின் தமிழ் மக்கள் பொதுச் சபை என்ற கட்டமைப்பு உருவாகியது. தமிழ் மக்கள் பொதுச்சபையின் முன்னெடுப்பினால் தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இப்பொழுது அது செயல்படுவதில்லை.

கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் மத்தியில் தோன்றிய மக்கள் அமைப்புகள் ஒரு கட்டத்துக்குப் பின் தொடர்ச்சியாக செயல்படவில்லை. தமிழ் மக்கள் பேரவை,தமிழ் மரபுரிமைப் பேரவை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சி இயக்கம், தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு ஆகிய அனைத்தும் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு பின் தேங்கியிருக்கும் ஒரு நிலைமையை காண்கிறோம். ஏன் ?

ஏனென்றால் சிவில் சமூகங்களுக்கு அடிப்படையான வரையறைகள் உண்டு. சிவில் சமூகங்கள் கட்சிகளைப் போல செயல்பட முடியாது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பிலிருந்து சிவில் சமூகங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் அது.முழு நேர அரசியற் செயற்பாட்டாளர்களைக் கொண்ட அர்ப்பணிப்பு மிக்க ஒரு அரசியல் இயக்கம் தான் இப்பொழுது தமிழ்மக்களுக்கு தேவை. அந்த அரசியல் இயக்கத்தால் வழிநடத்தப்படும் ஒரு தேர்தல் அரசியலே தமிழ் மக்களை சரியான வழியில் செலுத்தும்.

சிவில் சமூகங்கள் பேராசிரியர் ஜெயதேவ உயங்கோட கூறுவது போல அரசியல் சமூகத்தின் மீது தார்மீகத் தலையீட்டைச் செய்யலாம். ஆனால் தேர்தல் நடவடிக்கைகளில் கட்சிகளைப் போல ஈடுபடுவது என்றால் அதற்கு அரசியல் இயக்கங்கள் தான் பொருத்தமானவை. சிவில் சமூகங்கள் எப்பொழுதும் தளர்வான கட்டமைப்பைக் கொண்டவை. சிவில் சமூகங்களில் பல்வேறு வகையினர் இருப்பார்கள்.அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் இயங்குபவை, தூதரகங்களோடு உறவை வைத்திருப்பவை, கட்சிகளோடு நேரடியாகச் சம்பந்தப்பட விரும்பாதவை, கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று தமது யாப்பில் எழுதி வைத்திருப்பவை...போன்ற பல வகைப்பட்ட சிவில் சமூகங்கள் உண்டு.

இவ்வாறான சிவில் சமூகங்களின் கூட்டுக் கட்டமைப்பாக உருவாக்கப்பட்ட தமிழ்மக்கள் பொதுச் சபையானது ஒரு தேர்தல் மைய அமைப்பு அல்ல என்பதனை அந்த அமைப்பின் பிரதான நிகழ்வுகளின் போதும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுதும் மிகத் தெளிவாகத் திரும்பத் திரும்ப கூறப்பட்டது. தமிழ்மக்கள் பொதுச்சபையின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் எல்லாவற்றிலும் அதைக் காணலாம். இந்த வரையறை தான் ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து இரண்டு நாட்களில் அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை கையாள முடியாது என்று தமிழ்மக்கள் பொதுச்சபை அறிவிக்க முக்கிய காரணங்களில் ஒன்று.

சிவில் சமூகங்களின் கூட்டிணைவு ஒரு தளர்வான அமைப்பாகவே இருக்கும். அது கட்சி (22ம் பக்கம் பார்க்க)

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# வடக்கின் மீது கண் வைக்கும் சீனா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





சீனத் தூதுவர் கீ சென் ஹொங், அண்மையில் கொழும்பில் ஊடகவியலாளர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தியிருக்கிறார். அதில் அவர் வெளிப்படுத்திய சில கருத்துக்கள், சீனாவின் நகர்வுகள் எத்தகைய நிலையை நோக்கிச் செல்கின்றன என்பதை துலாம்பரமாக வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கையைப் போல, சீனா, ஜனநாயக நாடோ, சுதந்திரமான தேர்தல் முறையைக் கொண்ட நாடோ அல்ல. ஆனாலும், இலங்கையில் அண்மையில் நடந்த தேர்தல்கள், குறிப்பாக, பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள், சீனாவுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இதனை சீனத் தூதுவர் கீ சென் ஹொங்கின் அண்மைக்கால கருத்துக்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை, தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை கொண்டாடுவதை விட, வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் ஆதரவையும் அவர்கள் பெற்றிருப்பது தான், அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இந்தியாவின் செல்வாக்கில் இருந்து தமிழர்கள் விலகத் தொடங்கியிருக்கின்றனர் என்ற புரிதலை தேர்தல் முடிவு, சீனத் தூதுவருக்கு ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. தேசிய மக்கள் சக்தியை அவர்கள் ஆதரித்திருப்பதை, சீனாவை ஆதரிக்க தமிழர்கள் தயாராகி விட்டனர் என்பதைப் போல,அவர் உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பது போல தென்படுகிறது.

இது உண்மையா, இல்லையா என்ற விவாதம் இப்போது தேவையற்றது. பொதுத்தேர்தல் வாக்களிப்பு தீர்மானத்தை, சீன சார்பு, இந்திய சார்பு என ஒரு போதும் முடிச்சுப் போட முடியாது. அவ்வாறு போட முனைந்தால் அது தப்புக்கணக்குத் தான்.

தமிழர்களின் முக்கியமான பிரச்சினைகளில் இருந்து சீனா விலகியிருக்கவே விரும்புகிறது என்பதை, சீனத் தூதுவர் இப்போதும் உறுதிப்படுத்தியிருக்கிறார். அதாவது இனப்பிரச்சினை, மனித உரிமை மீறல், பொறுப்புக்கூறல் போன்ற விவகாரங்கள் எல்லாமே, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் என்று கூறி நழுவிக் கொள்கிறார்.

ஆனால் தமிழர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததை அவர் சாதகமான மாற்றம், முன்னேற்றகரமான விடயம் என்று குறிப்பிடுகிறார். அது உள்நாட்டு விவகாரம் இல்லையா? அதில் ஏன் அவர் தலையிடுகிறார்? தமிழர்களின் பிரச்சினைகளில், அதற்குத் தீர்வு சொல்வதில், பொறுப்புக்கூறுவதில் சீனா பங்காற்றத் தயாராக இல்லை. ஆனால், தமிழர்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்திருக்க வேண்டும், சீனாவை அரவணைக்க வேண்டும் என்று மட்டும் சீனா எதிர்பார்க்கிறது. இந்த விடயத்தில் சீனா ஒருவழிப் பாதையை மாத்திரம் திறந்து விட்டிருக்கிறது.

தமிழர்களுடனான அதன் அணுகுமுறை அவ்வாறானது தான். தமிழர்களிடம் இருந்து தனது நலன்களை அடைவதற்கு மாத்திரம் சீனா முற்படுகிறது. ஆனால், இந்தியா அப்படியிருக்கவில்லை. தமிழர் பிரச்சினை பற்றி இந்தியாவுக்கு ஒரு பார்வை உள்ளது. அதற்கான தீர்வு என்ன என்ற நிலைப்பாடு உள்ளது. அதில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம், தமிழருக்கு சாதகமானதாக இல்லாமல் இருக்கலாம், தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருக்கலாம். ஆனாலும், இந்தியாவிடம் அது பற்றிய ஒரு புரிதல், தெளிவான நிலைப்பாடு இருந்தது, இன்னும் இருக்கிறது.

தமிழர்கள் பிரச்சினை என்று முறையிட்டால், அதற்கு தீர்வு தருகிறதோ இல்லையோ, அதனை செவிமடுக்கிறது இந்தியா. ஆனால், சீனா அப்படியல்ல, தமிழர்களின் பிரச்சினையை கேட்கவோ, தீர்க்கவோ, அதனைச் சார்ந்த நிலைப்பாட்டை எடுக்கவோ, கருத்துக்களை முன்வைக்கவோ தயாராக இல்லை. அவ்வாறான நிலை ஏற்படுகின்ற போது, உள்நாட்டு விவகாரம் என்று கூறி நழுவிக் கொள்கிறது. தப்பிக்க முனைகிறது. இந்தச் சூழலை, தமிழர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான், அவர்களால் சீனாவையும், இந்தியாவையும் ஒரே தூரத்தில் வைத்து நோக்க முடியாமல் இருக்கிறது. தேர்தல்களுக்கு பின்னர் அந்த நிலைமைகளில் மாற்றங்கள் தென்படுவதாக சீனத் தூதுவர் உணர்கிறார் போலும். அத்தகைய நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். அல்லது ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். முன்னைய இரண்டு பயணங்களை விட, இந்தமுறை வடக்கு, கிழக்கிற்கான பயணத்தில் மாற்றத்தை அவதானிக்க முடிந்ததாக சீனத் தூதுவர் கூறியிருக்கிறார்.

ஆனால், அது எத்தகைய மாற்றம் என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை. அவருக்குள் அத்தகைய உணர்வை ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன என்பதை அறிந்தால் தான், அது சரியா, தவறா என்று எடை போட முடியும்.


தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததை பெருமகிழ்ச்சியாக வெளிப்படுத்தும் சீனத் தூதுவருக்கு, அதே மனநிலையுடன் வடக்கு, கிழக்கை பார்க்கும் போது, வேறுபட்ட ஒன்றாகத் தெரிந்திருக்கலாம்.

அப்போது அவர் அணிந்திருந்த கண்ணாடிக்கும் இப்போது அணிந்திருக்கும் கண்ணாடிக்கும் வித்தியாசம் உள்ளது. அந்த மாற்றம் கண்ணாடியில் தெரிந்த மாறுபட்ட விம்பமா அல்லது உண்மையான விம்பமா என்பதை பொறுமையாகத் தான் தீர்மானிக்க முடியும்.

வடக்கில் இருந்து முதலீட்டுக் கோரிக்கைகள் வந்திருப்பதாகவும், அவ்வாறான கோரிக்கைகள் விடுக்கப்பட்டால், அதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப் படும், உதவிகள் வழங்கப்படும் என்றும் சீனத் தூதவர் குறிப்பிட்டிருக்கிறார். வடக்கு கிழக்கில் சீனாவின் முதலீடுகளை இந்தியா விரும்புமா, அல்லது அனுமதிக்குமா என்ற கேள்வியும் பலருக்கு இருக்கிறது.

ஏனென்றால், வடக்கு, கிழக்கில் சீனா முதலீடு செய்வதை இந்தியா விரும்பாது என்ற கருத்து பரவலாக காணப்படுகிறது. இந்திய இராஜதந்திரி ஒருவரிடம், வடக்கில் சீனாவின் முதலீடு பற்றிய அச்சம் வெளியிட்ட போது, இந்தியாவிலேயே சீனா முதலீடு செய்கிற போது, வடக்கில் முதலீடு செய்தால் என்ன என்ற ரீதியாக பதிலளித்தார் என்ற தகவலும் உள்ளது. அந்தப் பதில் ஒரு வகையில் நியாயமானது. ஏனென்றால், இந்தியாவில் சீனா பெருமளவில் முதலீடுகளைச் செய்திருக்கிறது. அண்மைக்காலத்தில் தான் அதனைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா ஆர்வம் காட்டுகிறது. இந்தியா ஒரு மிகப்பெரிய சந்தையைக் கொண்ட நாடு. அதன் பலமும் பலவீனமும் அதன் சனத்தொகை தான். அங்கு முதலீட்டையும், சந்தைப்படுத்தலையும் செய்வது சுலபம். அது சீனாவுக்கு சாதகமானது. அதனைத் தாண்டி சீனாவினால் அங்கு செயற்பட முடியாது. அதற்கு இந்தியா இடமளிக்கவும் மாட்டாது. கடிவாளம் இந்தியாவின் கையிலேயே இருக்கும். ஆனால், வடக்கில் சீனாவின் முதலீடு அப்படியல்ல. இலங்கை அரசாங்கம் நினைத்த மாதிரி அவர்களை கடிவாளம் போட முடியாது. கொழும்பு துறைமுக துறைமுக நகர திட்டத்தை இடைநிறுத்தி விட்டு நல்லாட்சி அரசாங்கம் பட்டபாட்டை யாரும் மறந்து விட முடியாது. அதேபோன்று இயற்கை உர இறக்குமதி விடயத்தில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் மூக்குடைப்பட்ட வரலாறும் மறக்கக் கூடியதல்ல. அதை விட வடக்கு மாகாணம், இந்தியாவைப் போல பரந்துபட்ட சந்தையைக் கொண்ட இடமல்ல. இங்குள்ள சனத்தொ கையும் மிகவும் சின்னஞ் சிறியது. அப்படியிருந்தும் சீனா வடக்கில் முதலிடும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது என்றால், அதன் பிரதான நோக்கம் வர்த்தகம் அல்ல. ஒரு வர்த்தகம் இலாபகரமான தாக இருக்க வேண்டும் என்பது தான் முதலாவது எதிர்பார்ப்பு. அதனை புறக்கணித்து, ஒரு வர்த்தகம் முன்னெடுக்கப்படுகிறது என்றால் மறைமுகமான ஒரு நோக்கமோ, இலாபமோ, நிகழ்ச்சி நிரலோ இருக்க வேண்டும். வடக்கில் முதலிட விரும்பும் சீனா எந்தச் சந்தையைக் குறி வைக்க எதிர்பார்க்கிறது, யாருக்குப் போட்டியாக அதனை திறக்க முற்படுகிறது, அல்லது யாருமே போட்டியில் இல்லாத களத்தில் அது ஆட விரும்புகிறதா என பல கேள்விகள் இருக்கின்றன. வடக்கில் சீனா காலூன்ற விரும்புகிறது என்பது நன்றாகத் தெரிகிறது. அதற்கான கதவுகளை அது இப்போதே திறக்கத் தொடங்கி விட்டது. அதனை சீனத் தூதுவர் பகிரங்கமாகவே, வெளிப்படுத்தியிருக்கிறார். வடக்கில் குறிப்பாக தமிழர்களை அரவணைப்பதன் மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பாதுகாக்கலாம் என்றும், இந்தியாவுக்குச் சவால் விடலாம் என்றும், சீனா கருதுகிறது. வடக்கில் சீனா தனது செல்வாக்கை அதிகரிப்பதன் மூலம் பிரதானமாக இந்தியாவின் தளத்தை ஆட்டம் காணச் செய்ய முற்படுகிறது. ஆனால், இந்த விடயத்தில் இந்தியா உண்மையிலேயே மெத்தனமாக இருக்கிறதா அல்லது, உறங்கு நிலையில் இருப்பது போல பாசாங்கு செய்கிறதா என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

சிவமயம்



# ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

“இனுவில் திருவூர்”

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக் கொள்வதும் கற்றுக் கொள்ளாததும்

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு, தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு வழங்கிய ஒரு தண்டனைதான். அதே சமயம் அர்ஜுனாவைத் தெரிவு செய்தமை என்பது தமிழ் மக்கள் தங்களுக்கு தாங்களே வழங்கிய ஒரு தண்டனைதான்.அதன் விளைவுகளை அவர்கள் பின்னாளில் அனுபவிக்க வேண்டியிருக்கும் .

தேர்தலுக்கு முன்பாக கட்சிகள் தங்களுக்கு இடையே அடிபட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் ஒரு மூத்த அரசு அதிகாரி என்னிடம் சொன்னார். போகிற போக்கைப் பார்த்தால் தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம் என்று தமிழ்ச் சனம் முடிவெடுக்கும் ஒரு நிலைமை வரலாம் என்று. ஆம் அது தான் நாடாளுமன்ற தேர்தலில் நடந்தது. அதுபோல கொழும்பில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஒரு மூத்த முகாமையாளர் சொன்னார் இந்த முறை தும்புத்தடியை மாற்றிப் பார்ப்போம் என்று. திருநெல்வேலி சந்தையில் ஒரு மூத்த வியாபாரி சொன்னார், இவர்களுக்கு– அதாவது தமிழ் தேசிய கட்சிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று.

இம் மூன்று கூற்றுக்களும் தமிழ் மக்களின் மனநிலையை ஏதோ ஒரு விகிதமளவுக்கு பிரதிபலித்தன என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தண்டனை. ஆனால் அந்த தண்டனையிலிருந்து கட்சிகள் கற்றுக் கொண்டனவா?

தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணி அவ்வாறு கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை .தேர்தல் முடிவுகளின் பின் சுமந்திரன் வழங்கும் நேர்காணல்கள், அவருடைய விசுவாசிகள் சமூக வலைத்தளங்களில் எழுதும் கருத்துக்கள், உட்கட்சி முரண்பாடுகளை அவர்கள் வெளிப்படுத்தும் விதம், தோல்வியை, அதனால் ஏற்பட்ட வெறுப்பை வெளிப்படுத்தும் விதம், போன்றவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அவர்கள் தேர்தல் முடிவுகளில் இருந்து எதையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

தேர்தல் முடிவுகள் மிகவும் தெளிவானவை. கடந்த ஆண்டின் முடிவிலும் இந்த ஆண்டின் தொடக்கத்திலும் நான் எழுதிய கட்டுரைகளில் அதை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தேன். இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடக்கும் ஒரு தேர்தல் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மூத்த.பெரிய கட்சிக்குள் காணப்படும் சீரழிவை வெளியே கொண்டுவரும். அதேபோல இந்த ஆண்டின் முடிவில் நடக்கக்கூடிய ஒரு தேர்தலானது தமிழ்த் தேசிய அரசியலுக்குள் காணப்படும் சீரழிவை வெளியே கொண்டு வரும் என்று.

உண்மையில் அங்கு இந்த ஆண்டின் முடிவில் என்று கருதப்பட்டது, ஜனாதிபதி தேர்தல் தான். ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் அந்தச் சீரழிவை ஓரளவுக்குத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது. எனினும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு வந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவை வெளியே கொண்டு வந்து விட்டது. அந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தங்களுக்கு வழங்கிய தண்டனையை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் போதிய அளவுக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்களா?

இதில் தொடர் தோல்வி சுமந்திரனுக்குத் தான். இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் கட்சி உறுப்பினர்கள் அவரைத் தோற்கடித்தார்கள். அந்தத் தோல்வியை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. விளைவாக ஏற்பட்ட குழப்பங்களின் முடிவில் கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டது. இப்பொழுதும் நீதிமன்றத்தில் தான் நிற்கிறது. அதன் தலைவர் யார் என்பதில் தெளிவற்ற ஒரு நிலை.




சுமந்திரன் உட்கட்சிப் பிரச்சினையை கையாண்ட விதம் தமிழ் மக்களுக்கு அவர் மீது வெறுப்பை ஏற்படுத்தியதும் அவருடைய தோல்விக்கு ஒரு காரணம். அதாவது ஆண்டின் தொடக்கத்தில் அவருடைய கட்சி ஆட்களே அவரைத் தோற்கடித்தார்கள். ஆண்டின் முடிவில் தமிழ்மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். இந்த தோல்விகளில் இருந்து அவர் கற்றுக் கொண்டிருக்கிறாரா?

அவருடைய நேர்காணல்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. கட்சிக்கு ஆசனங்கள் அதிகரித்து இருப்பதனை ஒரு வெற்றியாக அவர் காட்டப் பார்க்கிறார். இல்லை, அது வெற்றி அல்ல. தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த அதே அளவு ஆசனங்கள் தான் அரசாங்கத்துக்கும் கிடைத்திருக்கின்றன. அதையும் ஒப்பிட வேண்டும். மொத்த தமிழ் தேசிய ஆசனங்கள் சுருங்கியுள்ளன. அதையும் கணக்கில் எடுக்க வேண்டும். சாணக்கியனுக்கு கிடைத்த வெற்றி அவருடைய தனிப்பட்ட உழைப்பினால் மட்டும் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலின் விளைவாகவும் தான் அந்த வெற்றி கிடைத்தது. தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மட்டக்களப்பில் கிடைத்தது 36 ஆயிரம் வாக்குகள் தான். ஆனால் வடக்கில் கிடைத்தது அதுபோல நான்கு மடங்கு. ஒரு கிழக்கு வேட்பாளருக்கு வடக்கில் கிடைத்த வாக்குகள் தாயக ஒருமைப்பாட்டுக்கு கிடைத்த வாக்குகள் தான். தாயக ஒருமைப்பாட்டுக்கான ஒரு நொதிப்பை அந்த வாக்களிப்பு ஏற்படுத்தியது. அந்த நொதிப்பும் ஒரு விதத்தில் கிழக்கில் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றிகளுக்குக் காரணம். எனவே சாணக்கியன் தன்னுடைய வெற்றியின் எல்லாப் பரிமாணங்களையும் சரியாக மதிப்பிட வேண்டும்.

தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் முடிவுகளிலிருந்து பாடங்களைக் கற்றிருப்பதாகத் தெரியவில்லை. புலம்பெயர்ந்து வாழும் அதன் உறுப்பினர்கள் சிலர் வழங்கும் நேர்காணல்களில் அதைக் காண முடிகிறது.

இம்முறை தேர்தலில் ஆயுதப் போராட்டப் பாரம்பரியத்தில் இருந்து வந்த பெரும்பாலான தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். செல்வம் அடைக்கலநாதனைத் தவிர. அவருக்கு கிடைத்த வெற்றி கூட அரும்பொட்டில் கிடைத்த ஒரு வெற்றி. மன்னாரில் அவருக்குச் சவாலான ஒரு வேட்பாளர் நிறுத்தப்படாததால் கிடைத்த வெற்றி. உள்ளூரில் சமூகம் சார்ந்து, மதம் சார்ந்து கிடைத்த வெற்றி. அவரைத் தவிர வேறு எந்த ஆயுதப் போராட்ட மரபில் வந்த தலைவரும், உறுப்பினரும் வெற்றி பெறவில்லை அதிலிருந்து கற்றுக் கொள்வதற்குப் பதிலாக “அங்கே ஒரு சதி நடந்திருக்கிறது. ஆயுதப் போராட்ட மரபில் வந்தவர்களைத் தோற்கடிக்கும் சதி என்று ஒரு சூழ்ச்சிக் கோட்பாடு உருவாக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல, பொதுக் கட்டமைப்பு தொடர்ந்து இயங்கியிருந்திருந்தால் அந்த தோல்வியைத் தவிர்த்திருக்கலாம் என்றும் ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. அதில் உண்மை உண்டு. ஆனால் பொதுக் கட்டமைப்பை நோக்கி உழைத்த தமிழ் மக்கள் பொதுச்சபையானது அரசியலில் அறம், நேர்மை என்பவற்றை அதிகம் வலியுறுத்திய ஒரு சிவில் சமூகக் கூட்டமைப்பு ஆகும். கட்சிகள் தந்திரங்களைச் செய்யலாம். அரசியல்வாதிகள் தந்திரம்தான் வாழ்க்கை என்று கூறலாம். ஆனால் சிவில் சமூகங்கள் அவ்வாறு கூற முடியாது. அரசியலில் கண்ணியமானவர்களின் தொகையை அதிகப்படுத்துவது. நேர்மையானவர்களின் தொகையை அதிகப்படுத்துவது, வாக்காளர்களுக்கு பொறுப்புக் கூறும் ஆட்களை முன்னிறுத்துவது என்றெல்லாம் கூறி விட்டு, சிவில் சமூகங்கள் அதற்கு மாறாக நடக்க முடியாது.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு எழுதப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக சங்குச் சின்னத்தை சில கட்சிகள் சுவிகரித்தன. தமிழ் மக்கள் பொதுச்சபையானது அந்த சின்னத்தை பயன்படுத்த வேண்டாம் என்று ஞாயிற்றுக்கிழமை கேட்டிருந்தது. திங்கள் செவ்வாய் ஆகிய இரண்டு நாட்களுக்குள் அது தொடர்பான முடிவை எடுத்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருக்கலாம். அந்த இடத்தில் பொதுக் கட்டமைப்பின் புரிந்துணர்வுத் தளத்தைப் பாதுகாப்பதா? அல்லது சங்குச் சின்னத்தின் மூலம் புதிதாகத் திரட்டப்பட்ட வாக்குகளை சுவிகரிப்பதா? என்ற இரண்டு தெரிவுகளுக்கு இடையில் முடிவெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்தது. அவர்கள் பொதுக் கட்டமைப்பை பாதுகாப்பது என்று முடிவெடுத்து இருந்திருந்தால், சங்குச் சின்னத்தை சுவிகரிக்கும் முயற்சியைக் கைவிட்டு இருந்திருப்பார்கள். எனவே பொதுக் கட்டமைப்பை பாதுகாக்க முடியாமல் போனதற்கு கட்சிகள் தான் பொறுப்பு.

இப்பொழுது தோல்விக்கு யார் யார் மீதோ பழியைப் போட்டு, சூழ்ச்சிக் கோட்பாடுகளை உற்பத்தி செய்து கொண்டிருப்பது என்பது அந்தத் தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள தயாரில்லை என்பதனைத் தான் காட்டுகின்றது.

இவ்வாறு தமிழ்த்தேசிய அரங்கில் உள்ள பிரதான கட்சிகளும் கூட்டுக்களும் தேர்தல் முடிவுகளில் இருந்து பொருத்தமான உண்மைகளைக் கற்றுக் கொள்ள முயற்சிக்காத ஒரு பின்னணிக்குள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் முடிந்த கையோடு, பகிரங்கமாக ஒரு அறிவிப்பை விடுத்திருக்கிறது. புதிய அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்குமாக இருந்தால் அதில் இனப் பிரச்சனைக்கான தீர்வாக முன்வைக்கப்படக்கூடிய தீர்வு பொதியை எதிர்கொள்வதற்கு தமிழ் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்பதுதான் அந்த அழைப்பு.தமிழ் மக்கள் பேரவையின் யாப்பு முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று முன்னணி அழைத்திருக்கிறது. அந்த அழைப்பு இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவாக இருந்தால், அதை வரவேற்கலாம்.

அந்த அழைப்பை ஏற்று சிறீதரன் இரண்டு கஜன்களையும் சந்தித்திருப்பதனை ஆர்வத்தோடு பரிசீலிக்க வேண்டும். முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களோடும் அது தொடர்பாகப் பேச விரும்புவதாக ஒரு தகவல்.

முன்னணி மீது ஆயிரம் விமர்சனங்கள் உண்டு. ஐக்கிய முயற்சிகளுக்கு முதலில் முட்டுக்கட்டை போடுவது அவர்கள்தான். எனினும் இம்முறை அவர்களாக முன்வந்து ஓர் அழைப்பை விடுத்திருப்பதை சாதகமாகப் பரிசீலிக்கலாம். கட்சி அரசியலில் நிரந்தரமான நண்பர்களோ பகைவர்களோ கிடையாது. நிரந்தரமான நலன்கள் தான் உண்டு.

தமிழ்த்தேசிய அரசியலில் தமிழ் மக்களுக்குப் பொருத்தமான, தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வை நோக்கி உழைப்பதற்காக இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில், நேர்மையாக உண்மையாக, யார் உழைத்தாலும் யார் அழைத்தாலும் அதனை வரவேற்க வேண்டும்.

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

# CHRISTMAS SALE
## COMING SOON

உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான
வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள
Friends Matrimony இல் பதிவு செய்யுங்கள்...



## மணமகள்

## மணமகன்



**ID08120764 (F)**
31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120762 (F)**
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120760 (F)**
29yrs, 5'3" , Single , Visaakam , 6 Sevai , Bachelors.. , Admin Data.. , Canada

**ID08120767 (M)**
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120766 (M)**
34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada

**ID08120765 (M)**
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120054 (F)**
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08120320 (F)**
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120732 (F)**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120767 (M)**
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120766 (M)**
34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada

**ID08120765 (M)**
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120006 (F)**
24yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United States

**ID08121004 (F)**
32yrs, 5'2" , Single , Mrigasheersham , 6 Sevai , Diploma , No work , Sri Lanka

**ID08121002 (F)**
32yrs, 5'3" , Single , Aswini , 12 Sevai , Bachelors.. , Process Associate , Sri Lanka

**ID08121010 (M)**
34yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , High School , Renovation , Canada

**ID08120997 (M)**
46yrs, 5'6" , Single , Kettai , N/A Sevai , Diploma , Sales manger , Sri Lanka

**ID08120995 (M)**
28yrs, 5'11" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Accounting , Canada

**ID08120991 (F)**
37yrs, 5'2" , Single , Thiruvaathirai , 3 Sevai , Diploma , Banker , Canada

**ID08120453 (F)**
31yrs, 5'4" , Single , Poorattathi , 11 Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120973 (F)**
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , United Kingdom

**ID08120964 (M)**
42yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , High School , Technical.. , Sri Lanka

**ID08120993 (M)**
39yrs, 5'11" , Single , Poosam , 2 Sevai , High School , Truck Mechanic , Canada

**ID08120986 (M)**
39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , Diploma , Analyst Business.. , Canada

**ID08120391 (F)**
28yrs, 5'2" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120939 (F)**
25yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120928 (F)**
26yrs, 5'3" , Single , Visaakam , 8 Sevai , Bachelors.. , Tba , Sri Lanka

**ID08120976 (M)**
31yrs, 5'11" , Single , Bharani , N/A Sevai , Diploma , Business , Sri Lanka

**ID08120969 (M)**
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120974 (M)**
30yrs, 5'5" , Single , Poorattathi , 12 Sevai , Postgraduate.. , Instructor , Sri Lanka

**ID08120927 (F)**
34yrs, 5'3" , Single , Kettai , 9 Sevai , Bachelors.. , Product Manager , Canada

**ID08120921 (F)**
27yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120889 (F)**
30yrs, 5'2" , Single , Pooraadam , 7 Sevai , Bachelors.. , Dr Co-ordinator , Canada

**ID08120969 (M)**
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120957 (M)**
31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120938 (M)**
46yrs, 5'4" , Single , Aswini , 6 Sevai , Bachelors.. , IT System.. , India

# தமிழ் அரசியல் தலைவர்களே! சிலுசிலுப்பு வேண்டாம்! பலகாரங்களைப் படையுங்கள்!

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரகாலத்தில் ஜேவிபியின் செயலாளர் ரில்வின் சில்வா தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமில்லை. அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்சனை தீர்ந்தால் சரி எனும் பொருள்பட ஊடகங்களுக்குத் தெரிவித்ததாக ஒரு சலசலப்பு ஏற்பட்டுப் பின்னர்









அவர் அவ்வாறு கூறவில்லை கூறியிருக்க மாட்டார் என ஜேவிபியின் முக்கியஸ்தரான விமல் ரட்ணாயக்க விளக்கம் தந்தார். அந்த விளக்கத்துடன் அந்த விவகாரம் அடங்கிப் போயிற்று.

இப்போது என்னவென்றால் மீண்டும் பூதம் புறப்பட்டது போல, ரில்வின் சில்வா தமிழ் அச்சு ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் '13 ஆவது திருத்தம் இல்லாது ஒழிக்கப்படும்' என்று கூறியதாக ஒரு விடயம் வெளிக்கிளம்பி அதற்குத் தமிழ்த் தேசியத் தரப்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஶ்ரீதரன் மற்றும் சாணக்கியன் (தமிழரசுக் கட்சி) கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (தமிழ்க் காங்கிரஸ்-தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) செல்வம் அடைக்கலநாதன் (ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி.ஃரெலோ) ஆகியோரிடமிருந்து எதிர் வினைகளும் ஆற்றப்பட்டுள்ளன. ரில்வின் சில்வா ''13' ஒழிக்கப்படும் என்று நான் கூறவேயில்லை. புதிய அரசியலமைப்பில் சிறந்த தீர்வு நடைமுறைப்படுத்தப்படும் வரை 13 ஆவது திருத்தம் நீக்கப்படாது என வியாக்கியானம் வேறு கொடுத்துள்ளார்.

03.12.2024 அன்று நடைபெற்ற புதிய பாராளுமன்றத்தின் கன்னி அமர்வின் போது சாணக்கியனிடம் சபை முதல்வர் விமல் ரட்ணாயக்க மாகாண சபை முறைமை குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவிடம் பேசும்படியும் அதற்கான நேரம் ஒதுக்கித் தரப்படும் எனவும் கூறியதைத் தொடர்ந்து மறுநாளே (04.12.2024) தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்று அச்சந்திப்பில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு குறித்து புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் போதே கவனத்தில் கொள்ள முடியும் என ஜனாதிபதி குறிப்பிட்டதாகத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் ஶ்ரீதரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஶ்ரீதரன் அதற்கு முன்பு ஏதோ தமிழரசுக் கட்சியின் ஆதரவில்லாமல் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பது போல் புதிய பாராளுமன்றக் கன்னியமர்வில் 'சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டால் தேசிய மக்கள் சக்தி அரசுடன் இணைந்து பயணிக்கத் தயார் என்றும் அறிவிப்புச் செய்துள்ளார்.

இவற்றை. விட அடுத்த வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற புதிய அரசியலமைப்பு மூன்று வருடங்களுக்குப் பின்னரே உருவாக்கப்படும் என்ற அரச தரப்பு அறிவிப்புக்கள் வேறு.

இவற்றையெல்லாம் நுணுகி நோக்கும் போது 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதில் தெளிவான நிலைப்பாடு அல்லது வரையறை அல்லது உறுதிப்பாடு அரசாங்கத் தரப்பிலும் இல்லை: தமிழர் தம் அரசியல் தரப்பினரிடத்திலுமில்லை என்றே படுகிறது. '13'முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டுமாயின் முதலில் தேவை அதற்கான அரசியல் விருப்பமாகும் (Political Willingness). ஆனால் இந்த அரசியல் விருப்பம் இரு தரப்பாரிடத்திலும் இல்லை இருந்தால் இந்த விவகாரம் இவ்வாறு எடுப்பார் கைப்பிள்ளையாகி ஒத்துப்பட்டுத் திரியத் தேவையில்லை. அதற்கான அவசியமுமில்லை. 13ஆவது திருத்தம் தற்போது நடை முறையிலுள்ள அரசியல் அமைப்பின் ஒரு அங்கமாய் உள்ளது. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் உள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும் மூன்றிலிரண்டு பங்கு பாராளுமன்றப் பெரும்பான்மையையும் தம் வசம் வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்யும் விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவது அவசியம்.

ஏனெனில் 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா காலத்திலிருந்து கடந்த ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க காலம்வரை 37 வருடகாலமாக அது முழுமையாக அமுல்செய்யப்படவேயில்லை. முறைமை மாற்றம் என்பது வினைத்திறன்மிக்க அதிகாரப்பகிர்வுப் பொறிமுறையையும் உள்ளடக்கியது தான் என்பதைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உணரவேண்டும்.

எனவே 13 ஆவது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம் பற்றி அரசாங்கத் தரப்பு வெறுமனே வாய் மெல்லும் வியாக்கியானங்களைக் கொடுத்துக் கொண்டு காலத்தைக் கடத்தாமல் அதனை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான படிமுறை நடவடிக்கைகளில் செயற்பாட்டில் இறங்க வேண்டும்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை சும்மா சுய நிர்ணய உரிமை-சமஸ்டி என்று சொல்லாடல்களை உச்சாடனம் பண்ணிக் கொண்டு திரியாமல் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்ய வேண்டியதன் அவசரத்தையும் அவசியத்தையும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் முன்னெடுப்பதற்கான மக்கள் இயக்கத்தை வெகுஜனப் போராட்டத்தை. இராஜதந்திர நடவடிக்கைகளைத் தாமதியாது ஆரம்பிக்க வேண்டும்.

இல்லையேல், இந்த அரசாங்கத்தின் பதவிக் கால முடிவில் அரசாங்கத் தரப்பில் சில உறுதிமொழிகளும் தமிழர் தரப்பில் பாராளுமன்ற உரைகளும் பத்திரிகை அறிக்கைகளும் ஊடகச் சந்திப்புக்களுமே மிஞ்சும். தமிழ் அரசியல்வாதிகளே! சிலுசிலுப்பு வேண்டாம்! பலகாரங்களைப் படையுங்கள்!!

- தம்பியப்பா

# மருத்துவர்கள் போல் உடையணிந்து மருத்துவமனைக்குள் நுழைந்து பாலஸ்தீன போராளியைக் கடத்திச் சென்ற இஸ்ரேல் படையினர்

பொதுமக்கள் மருத்துவர்கள் போன்று உடையணிந்த இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் மேற்குகரையில் உள்ள மருத்துவமனைக்குள் நுழைந்து பாலஸ்தீன போராளியொருவரை கடத்தி சென்றுள்ளனர் என சின்என்என் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலில் இரண்டு நாட்களிற்கு முன்னர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பாலஸ்தீன போராளி உறுப்பினர் ஒருவரையே இஸ்ரேலிய படையினர் கடத்திச் சென்றுள்ளனர்.

மருத்துவர்கள் தாதிமார்கள் சாதாரண பாலஸ்தீனிய பெண்கள் போன்று உடையணிந்து வந்த 20க்கும்அதிகமான இஸ்ரேலின் இரகசிய விசேட படைப்பிரிவினர் அவரை கடத்தி சென்றனர் ஆறு நிமிடங்களில் அந்த நடவடிக்கை முடிவடைந்துவிட்டது என பெயர் குறிப்பிட விரும்பாத மருத்துவமனை அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை இடம்பெற்ற வேளை அங்கிருந்தவர்கள் எடுத்துள்ள வீடியோக்கள் மருத்துவர் போன்று உடையணிந்த ஒருவர் அந்த நபரை உறுப்பினரை சக்கர நாற்காலியில் நேபிலஸ் மருத்துவமனையிலிருந்து வெளியே கொண்டு சென்று இலக்கத் தகடற்ற வாகனத்தில் ஏற்றுவதை காண்பித்துள்ளன.

போராளியொருவரை கொலை செய்ய முயற்சி செய்த பின்னர் பாதுகாப்பு படையினர் துல்லியமாக செயற்பட்டு நேப்பிளஸ் மருத்துவமனையில் அவரை கைது செய்தனர் என இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர்



தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் அய்மன் கனாம் இவர் மேற்குகரையில் உள்ள இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் பங்கேற்றிருந்தார் அந்த தாக்குதலில் ஒரு இஸ்ரேலியர் கொல்லப்பட்டார் என இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

## காசாவில் இனஅழிப்பு

காசாவில் இஸ்ரேல் இன அழிப்பில் ஈடுபடுவதாக சர்வதேச மனித உரிமை அமைப்பான ஆம்னெஸ்டி இண்டர் நேஷனல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பினருக்கு இடையே காசாவில் ஏறக்குறைய ஒருவருடத்திற்கு மேலாக போர் நடை பெற்று வருகிறது. இதனால், லட்சக் கணக்கான மக்கள் காசா பகுதி யிலிருந்து இடம் பெயர்ந்தனர். இப் போரில் இதுவரை 44,600பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்திற்கும் அதிகாமானோர் காயமடைந்துள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் என்பது அதிகமாக உள்ளதாக சர்வதேச சேவை அமைப்புகள் அறிவித்துள்ளன.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கட்டப் போவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸா பகுதியை முற்றுகையிட்டு அங்கு வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஹமாஸின் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை ஈரானில் வைத்து இஸ்ரேல் கொலை செய்தது. இதனைத் தொடர்ந்து ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹஸன் நஸ்ரல்லாஹ் வீட்டின் மீது ஏவுகணை தாக்குதலை நடத்திய இஸ்ரேல் அவரையும் கொலை செய்தது. மேலும் சமீபத்தில் இஸ்ரேல் தாக்குதலில் ஹமாஸின் அடுத்த தலைவரான யஹ்யா சின்வாரும் கொல்லப்பட்டார். கடந்த வாரம் காசா சுகாதாரத்துறை(20ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த்தேசிய சாராயக்கடை:- செய்கூலியும் சேதாரமும்!

- குணசீலன் -

சுவிஸிலிருந்து முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் ஊருக்கு போய் இருந்தார். இரவுச் சாப்பாட்டிற்கு முன் மேல்நோக்காட்டிற்காக தண்ணி பாவிப்பது அவரது பழக்கம். நம்ம பாஷையில் சாப்பாட்டுக்கு முன் எடுக்கும் மருந்து. அவரை விடுமுறை முடிந்து வந்த பின்னர் ஒரு நாள் சுவிஸில் தற்செயலாக சந்தித்த போது என்ன? ஊருக்கு போனதாக அறிந்தேன். நாடு எப்படி இருக்கிறது? என்று கேட்டேன். அரசியல் ஆர்வலர் ஒருவரதும் தண்ணிக்கந்தர் ஒருவரதும் இரு வேறுபட்ட முன்னுரிமைகளுக்கு எனது கேள்வியும், அவரது பதிலும் அவரவர் நியாயம்.

அதை என்னத்தை கேக்கிறீர். இங்கிருந்து போத்தல் போத்தலாய் வாங்கி, அதுக்குள்ள வைச்சி மறைச்சி, இதுக்குள்ள வைச்சி மறைச்சி கொண்டு போனால் அங்க ஒரிஜினல் சரக்கு கூப்பிடு தூரத்தில் காலடியில் கிடக்குது என்று லாவகமாக சொன்னார். என்ன DUTY FREEயை சொல்கிறீர்களா என்றேன். ச்சீ.... இல்லை .

இந்த சாராய வியாபார அரசியல் ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. தமிழ்த்தேசிய மக்கள் திரட்சியை ஏற்படுத்துவதற்கு, மக்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டாமா? மேல்நோக்காடு நோய்'' வெளிநாட்டுக்காரருக்கு மட்டுமா? அதற்காக ஆஸ்பத்திரிகளுக்கு பதிலாக சாராயக்கடைகளை திறந்து வைத்தியம் செய்கிறார்கள் தமிழ்த்தேசிய எம்.பி.க்கள். பழைய ஜனாதிபதியிடம் பெற்றது மருந்துக்கடை தான் என்றும் தமிழ்ப் பிரதேசங்களில் ஆஸ்பத்திரியில்லாத குறையை போக்க, மருந்து தட்டுப்பாடு நிலைமை போக்க இதைச் செய்தோம் என்றும் இவர்கள் திரிக்காமல் இருந்தால் சரி.

கடந்த அரசாங்க காலத்தில் 361 சாராயக்கடைகளுக்கும், 172 சில்லறை மதுபான விற்பனை நிலையங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் சபை முதல்ரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். இவற்றில்

வடக்கு மாகாணத்தில் : 32. கிழக்கு மாகாணத்தில் : 22 சில்லறை மது விற்பனை நிலையங்களுக்கான 35 புதிய லைசென்ஸ்களில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் மட்டும் 25. குடாநாட்டிற்கு வெளியே அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய மாவட்டங்கள் இவை இல்லையா? இதனால் மருந்துக்கடை ஒதுக்கீடு 35:25. யாழ் மேலாதிக்கம், பிரதேச வாதம், புறக்கணிப்பு எல்லாவற்றையும் பொய்யாக்கி தண்ணீர்....தண்ணீர்... கிளிநொச்சி, வன்னியில் சலசலத்து ஓடுது. வடக்குக்கு மகாவலியை திசை திருப்பி இருக்கிறார்கள். மக்கள் பாவம் திசையை திருப்புவதில் தமிழ், சிங்கள தேசியங்களுக்கு இடையே நல்ல ஒற்றுமை நிலவுகிறது. இதனால் தான் திசைகாட்டி அநுர அரசாங்கத்தோடு ஒத்துழைக்க தயார் என்கிறார்கள் போலும்.

கிளிநொச்சி : 16. யாழ்ப்பாணம்:05. அம்பாறை: 05. திருகோணமலை: 04. வவுனியா: 02. மன்னார்: 02. மட்டக்களப்பு: 01. முல்லைத்தீவு: 00.

இது அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்ட தமிழீழ சில்லறை மதுபான விற்பனை நிலையங்களின் பட்டியல். கொழும்பு மத்திய அதிகாரத்திடம் இருந்து போராடி பெற்ற தமிழர் தாயகத்திற்கான அதிகாரப் பகிர்வு. இவற்றை விடவும் சுமந்திரன், சாணக்கியன், செல்வம் ஆகியோருக்கும் மற்றும் அரசியல்வாதிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க நிதி ஒதுக்கீடு செய்து வாக்கு வாங்கிய குற்றச்சாட்டும் இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டம் இதில் தப்பிக் கொண்டுள்ளது. தமிழ்த்தேசியம் பேசி தமிழ்மக்களை சாராய மயக்கத்தில் வைத்து விற்பனை அரசியல் செய்யும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை விடவும் இது பரவாயில்லை. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை ஆதரித்த இரு



இராஜாங்க அமைச்சர்கள் இருந்த போதும் இந்த கேவலமான சாராயக்கடை அரசியலை அவர்கள் செய்யவில்லை என்பது இப்போது மக்களுக்கு தெளிவாகி இருக்கிறது.

மட்டக்களப்பு படுவான்கரையில் காஞ்சிரம்குடாவில் அமைக்கப்பட இருந்த ஒரு மதுபான விற்பனை நிலையத்தை தடுத்து நிறுத்துமாறு அன்றைய கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சி.சந்திரகாந்தன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம் வெளியாகி இருக்கிறது.

2023 டிசம்பர் 13ம்திகதி அன்று MI/COL/EDS/2003/01 என்ற இலக்கக் கடிதத்தின் மூலம் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். மண்முனை மேற்கு பிரதேசம் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்றும், விவசாயம், மீன்பிடி, மற்றும் கூலித்தொழில்களை செய்யும் இந்த மக்கள் வறுமையால் வாடுகின்றனர் என்றும் அக் கடிதம் கூறுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரிப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட இந்த அரசியல் இலஞ்ச விவகாரத்தில் ஆரம்பத்தில் இருந்தே சி.சிறிதரன், சார்ல்ஸ் நிர்மலநாதன், விநோதரலிங்கம், விக்கினேஸ்வரன் போன்ற தமிழ்த்தேசிய அன்றைய எம்.பி.க்களின் பெயர்கள் இது விடயமாக அடிபட்டன. அப்படி ஒன்றும் இல்லை முடிந்தால் நிரூபியுங்கள் என்று சவாலுக்கு மேல் சவால் விடப்பட்டது.

இந்த நிலையில் விக்கினேஸ்வரன் அவசரக்குடுக்கையாக முந்திக் கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட, வறுமையில் உள்ள ஒரு கைம் பெண்ணுக்கே தான் மதுபான கடை அனுமதிப் பத்திரத்திற்கு சிபார்சு செய்ததாக அறிவித்தார். மூன்று விரல் திருநீற்று பட்டை, சைவ தமிழ்த்தேசிய நிறங்களான சந்தணமும் குங்குமமும் நெற்றியில், வெள்ளைவேட்டி, சால்வை போதாக்குறைக்கு தாடி இவற்றோடு முள்ளில் சிக்கிய விக்கினேஸ்வரர் நிலைமையை கணக்கு போட்டு தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதால் இளையோர்க்கு வழிவிட்டு விலகினார். இவர் செய்த பாவம் இளையோரையும் தோற்கடித்தது. இதனால் தான் கார்ல் மார்க்ஸ் மதம் ஒரு அபின் என்றார் போலும்.

சிவஞானம் சிறீதரன் தவிர மற்றைய சிபார்சு சந்தேக நபர்கள் பாராளுமன்ற தேர்தலில் கணக்கை சரியாகப் பார்த்து ஒதுங்கிக் கொண்டார்கள். தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் சிறிதரனுக்கு காய் வெட்டப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் சுமந்திரனின் சிறிதரன் மீதான குற்றப்பத்திரத்தில் பொதுவேட்பாளரை ஆதரித்தது, கட்சி கட்டுப்பாட்டை மீறியது, பொதுவேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தது என்பனவற்றுடன் சாராயக்கடை விவகாரமும் சேர்ந்து இருந்தது. என்றாலும் சுமந்திரனின் கட்டுப்பாட்டில் இருந்த வேட்பாளர் தேர்வுக்குழு சிறிதரனுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கியது.

வாக்கு சேகரிக்கும் தேர்தல் வியூகத்தில் பொதுவேட்ப்பாளரை ஆதரித்த குற்றச்சாட்டுக்களை கொண்ட சிறிநேசனுக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டது. இங்கு, சிறிநேசன், சிறிதரனை மக்கள் தேர்தலில் தோற்கடிப்பார்கள் என்ற கணக்கு பிழைத்து இருவரும் வெற்றி பெற்றார்கள். சுமந்திரன் தோற்றுப் போனார்.

பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை பல தடவைகள் நேரடியாக சந்தித்தும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டும் பார் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் சுமந்திரன். சிறிதரனும் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். ஆனால் இப்போது பார் விபரங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் அமைவிடங்களும் வெளிவந்துள்ளன. ஆனால் அதன் பின்னணியில் இருந்த அரசியல்வாதிகளின் விபரம் இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை. இதற்கான கோரிக்கை வலுக்கிறது.

எம்.ஏ. சுமந்திரன் பத்திரிகையாளர் மாநாடு நடாத்தியும், இ. சாணக்கியன் பாராளுமன்றத்திலும் சிபாரிசு செய்தவர்களின் விபரங்களை அறிய போராடுகிறார்கள். சாணக்கியன் பேசும் போது கிளிநொச்சியை பெயர் குறிப்பிட்ட போது அருகில் இருந்து பூனை முளுசுகிறதை பார்க்க பரிதாபமாக இருந்தது. பெயர் பட்டியல் வெளிவந்தால் ........!

சிறிதரன் கொடுக்கப் போகின்ற விலை மிக அதிகமானதாக இருக்குமோ? இதில் சேதாரமும், செய்கூலியும் சேர்ந்து இருக்கும்.

## மருத்துவர்கள் போல் உடையணிந்து மருத்துவமனைக்குள்....

(19ம் பக்கத் தொடர்ச்சி) வெளியிட்டுள்ள அறிக்கையில் 1000க்கும் மேற்பட்ட மருத்துவப் பணி யாளர்கள் கொல்லப்பட்டுள்ள்ளதாக தெரிவித்துள்ளது. இதே போல இந்த ஒரு வருடம் மட்டுமே பாலஸ்தீனத்தில் கொல்லப்பட்டுள்ள பத்திரிகையாளர்களின் எண்ணிக்கை இது வரை நடைபெற்ற உலகப் போர்களில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் எண்ணிக்கையை விட இருமடங்கு அதிகம் என்று பல சர்வதேச பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பத்திரி கையாளர்களை பாதுகாக்கும் அமைப்பு (Committee to Protect Journalists) வெளி யிட்டுள்ள அறிக்கையின்படி 180க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்ல ப்பட்டுள்ளதாகவும் இவர்களில் அதிகமானோர் பாலஸ்தீனியர்கள் என்பது குறிப் பிடத் தக்கது.

இந்த நிலையில் காஸாவில் நடை பெறும் நிகழ்வுகள் தொடர்பாக ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல் மனித உரிமை அமைப்பு ஒரு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது.. இஸ்ரேல் ராணுவம் பாலஸ்தீனத்தில் நடத்தும் தாக்குதலை ஆய்வு செய்ததில் பாலஸ்தீன மக்களு க்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் இன அழிப்பில் ஈடுபடுவது தெரிய வரு கிறது. இது சர்வதேச சமுதாயத்துக்கு ஓர் எச்சரிக்கை மணியாகும். இந்த இன இழிப்பு இப்போதே தடுத்து நிறுத்தப்படவேண்டும். இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ஆம் தேதி நடத்திய தாக்குதலை நியாயப்படுத்த முடியாது தான். அதே போல், காஸாவில் பொது மக்களிடையே ஆயுதக் குழுவினர் கலந்திருப்பதையும் மறுப்பதிற்கில்லை. ஆனால் அந்தப்பகுதியில் இஸ்ரேல் நடத்தி வருவது இனஅழிப்பே ஆகும்.

## நாட்டுக்கு புதிய அரசியலமைப்பை....

(8ம் பக்கத் தொடர்ச்சி) தான் உள்ளது. அதற்கான தீர்வு வழங்கப்படும் வரையில் மக்களிடத்திலிருந்து வெளிவருகின்ற கோசங்கள் ஓயப்போவதில்லை. எனவே எமது நோக்கம், அனைவரினது இணக்கத்துடன் ஏற்படுத்தப்படுகின்ற தீர்வானது மக்களின் அங்கீகாரத்துக்காக விடப்படும். அதாவது, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்ற நிலையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவோம்.

அதேநேரம், தற்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் இனவாதம், மதவாதத்தை பேசவில்லை. அவ்வாறு பேசுவதற்கு இடமளிக்கவும் இல்லை. வழக்கமாக ஆளும் தரப்பு தான் அவ்விதமான மனோநிலையில் செயற்படும். ஆனால் இம்முறை அவ்விதமான நிலைமை காணப்படவில்லை. ஆகவே இந்த மாற்றமானது, புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் செயற்பாடுகளுக்கு சவால்களை அளிக்காது என்றே கருதுகின்றேன். நிச்சயமாக மக்கள் எதிர்பார்க்கின்ற முறைமை மாற்றமொன்று ஏற்படும் என்றார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025:- விபரங்களுக்கு:- 416 841 9600

# சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் மாற்றமா? ஏமாற்றமா?

- அழகு குணசீலன் -

அன்றைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினதும், இன்றைய தமிழரசுக்கட்சியினதும் ஊடகப்பேச்சாளர் மதியாபரணம் சுமந்திரன் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கும், விருப்பத் தேர்வில் சுமந்திரனுக்கும் மக்கள் அளித்த வாக்குகள் குறைவானவை. இதனால் 63,327 வாக்குகளை (19.5 %) வாக்குகளை பெற்ற தமிழரசுகட்சிக்கு ஒரு இருக்கையே கிடைத்தது. அது மக்களின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் சிவஞானம் சிறீதரன் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட வாய்ப்பளித்துள்ளது. இது சுமந்திரனை சிறிதரன் தோற்கடித்த இரண்டாவது சந்தர்ப்பம். முன்னையது தமிழரசுக்கட்சி தலைவர் தேர்வில் பொதுச்சபையில். பின்னையது கடந்த பாராளுமன்ற தேர்தலில் மக்கள் மன்றத்தில்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான என்.பி.பி. அண்மைய இரண்டு தேர்தல்களிலும் புதிய அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றை தேர்தல் விஞ்ஞானத்தில் அறிவித்திருந்தது. தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுள்ள என்.பி.பி.க்கு தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசிய பரப்பில் புதிய அரசியல் அமைப்பு பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் போது சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லையே என்ற ஏக்கம் ஒரு தரப்பால் வெளியிடப்பட்டு வருகிறது. இதற்கு மாறாக தமிழ்த் தேசிய மறு தரப்பு சுமந்திரன் பாராளுமன்றத்தில் இருந்தால் அவர் கொழும்பு அரசுக்கு ஆதரவாகவே செயற்படுவார் இதனால் சுமந்திரன் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? என்று கேட்கிறது.

தேர்தல் காலத்தில் இருந்தே சுமந்திரனின் பாராளுமன்ற தேர்தல் வெற்றிக்காக யாழ்.பத்திரிகை ஒன்று சுமந்திரனுக்கு ஆதரவான கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தது. இவற்றில் சுமந்திரனுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி சுசேலம் விசாரிப்புக்களும், சந்திப்புக்களும் கூட அரசியலாக்கப்பட்டன. மந்திரி பதவியும் இதில் ஒன்று. ஜனாதிபதியுடனான டக்ளஸ் தேவானந்தாவின் சந்திப்பை விமர்சித்த அந்த பத்திரிகை சுமந்திரனை தோளில் தட்டிக் கொடுத்தது. சுமந்திரனும், டக்ளஸும் இதை தேர்தலுக்கு பயன்படுத்த முயன்ற போது ஜே.வி.பி முக்கியஸ்தர்கள் அதை மறுத்து ஊடகச்சந்திப்பு நடாத்தினர்.

ஜனாதிபதி தனிப்பட்ட வகையில் தேர்தலில் தோல்வியுற்ற சுமந்திரனை தேற்றுவதற்கு கூறிய வார்த்தைகள் உத்தியோகபூர்வ அரசாங்கத்தின் வார்த்தைகள் அல்ல. என்.பி.பி.யின் உத்தியோக பூர்வ நிலைப்பாடும் அல்ல. இவை எல்லாமே திட்டமிட்டு அரசியலாக்கப்படும் நிலை காணப்படுகிறது. இதே ஆறுதலை ஜனாதிபதி டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சொன்னதாகவும் பேசப்படுகிறது. இது அரசியல் நாகரிகம். இந்த நாகரிகத்தை அநாகரிகமாக்கி தமிழ்த்தரப்பு அநாகரிக அரசியல் செய்கிறது. தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் சி.வி.கே. சிவஞானமும் சுமந்திரனுக்கு ஆதரவான கருத்துக்களை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். இவர் கட்சியில் சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர். பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனின் வாயாகவும், மூளையாகவும் செயற்படுபவர். இந்த சுமந்திரன் ஆதரவு தரப்புக்கள் கூறும் "சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம்'' தமிழ்மக்களுக்கு பாதகமானதா? அப்படி ஒரு விம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்க இந்த பரப்புரை செய்யப்படுகிறதா? தமிழரசுகட்சியை தமிழ்த்தேசியக் கட்சிகளை பொறுத்த மட்டில் சுமந்திரனின் தோல்வி குறித்து இரு வேறு விமர்சனங்கள் உண்டு. ஒரு பிரிவினர் சுமந்திரனின் தோல்வியினால் ஏமாற்றம் அடைந்து இருப்பவர்கள். மறு பிரிவினர் சுமந்திரனின் தோல்வி மக்கள் விரும்பிய. மாற்றம் ஒன்றின் வெளிப்பாடு என்று கூறுகிறார்கள். சுமந்திரனோ இவை பற்றி வெளிப்



படையாக அலட்டிக் கொள்ளாமல் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன், தேசியப்பட்டியலில் எம்.பி.யாக மாட்டேன். பாராளுமன்றத்திற்குள் இருந்து தான் அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதல்ல, வெளியில் இருந்தும் செய்யலாம். அப்படி ஏற்கனவே வெளியில் இருந்து பணி செய்து கிடந்த சட்டத்தரணிகளுள் ஒருவர். ஜனாதிபதி சட்டத்தரணியும் கூட. சட்ட நுணுக்கங்கள் அவருக்கு தண்ணி பட்டபாடு என்று கூறப்படுகிறது. சர்வதேச இராஜதந்திரிகளுடனும் தனிப்பட்ட உறவுகளை கொண்டவர். ஆனால் இவை எல்லாம் தெரியாமல் யாழ்ப்பாண மக்கள் அவரை நிராகரிக்கவில்லை. சுமந்திரனின் இந்த தகுதிகளுக்கும் திறமைகளுக்கும் அப்பால் அந்த மக்கள் வேறு ஒன்றை, கடந்த 15 ஆண்டுகளாக முதுமை அடைந்திருந்த இரா.சம்பந்தரை விடவும் சுமந்திரனிடம் இருந்து எதிர்பார்த்தார்கள். தங்களின் எதிர்பார்ப்பிற்கும் சுமந்திரனின் செயற்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியை வெளிப்படுத்தத்தால் தான் சம்பந்தர் காலத்தில் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்டேன் என்றெல்லாம் பட்டியல் போட்டு தமிழ்த் தேசிய அரசியலில் தமிழரசுக்கட்சியின் தலைசிறந்த ஜனநாயகவாதியாக தன்னைக்காட்டி கொள்கிறார்.

ஆனால் கடந்த காலத்தில் சுமந்திரனின் அரசியல் செயற்பாடுகளையும், நகர்வுகளையும் பட்டியல் போடும் மறு தரப்பு சுமந்திரன் தமிழ்தேசிய ஒற்றுமையை குலைத்தவர், கொழும்பு அரசுக்கு ஆதரவானவர், தமிழ்த்தேசிய போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர், கடந்த நல்லாட்சியில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது ஒத்தோடியவர், ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவுகள் சுமந்திரனின் தனிப்பட்ட முடிவுகளுக்கு கட்சிசாயம் பூசப்பட்டவை என்று கூறுகின்றனர்.

முன்னுக்கு பின் முரணாக செயல்படுபவர், கட்சிக்குள் மாற்று கருத்துக்கள் கொண்டவர்களை ஓரம் கட்டி உட்கட்சி ஜனநாயகத்தில் -கருத்துச் சுதந்திரத்தில் தன் ஆதரவாளர்களை கொண்டு ஆதிக்கம் செலுத்துபவர் என்றெல்லாம் பட்டியல் போடுகின்றனர்.

இதற்கு சுமந்திரன் பாராளுமன்றத்தில் இல்லாத இந்த குறுகிய காலத்தில் தமிழ்தேசிய சூழலில் இடம்பெறும் சாதகமான மாற்றங்களை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு பொது நிலைப்பாட்டிற்காக பேசுவதற்காக தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விட்டிருக்கிறார். செல்வம் அடைக்கலநாதன் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கோரியிருக்கிறார். தமிழ்த்தேசிய அரசியல் ஆய்வாளர்கள், ஊடகங்கள் தமிழ் தரப்பு பிரிந்து நின்றதினால்தான் என்.பி.பி.வடக்கில் வெற்றி பெற்றது என்று பேசுகின்றனர்.

ஆக, சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் மாற்றத்திற்கான ஒரு திசையை காட்டுகிறது என்பது இவர்கள் வாதம். மதியாபரணம் சுமந்திரன் தலை சிறந்த இலங்கை சிவில்

2020 பாராளுமன்றத் தேர்தலில் சுமந்திரனுக்கு ஒரு சிவப்பு சிக்னல் காட்டினார்கள். அது தான் சுமந்திரன் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகள் பெறுவேன் என்று கூறியபோது அதை அவர்கள் அரை வாசியாக குறைத்த முன் எச்சரிக்கை. அந்த முன்எச்சரிக்கையை சுமந்திரன் கடந்த நான்கு ஆண்டுகளில் கவனத்தில் கொள்ளவில்லை. அவரின் அரசியலில் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. அதனால் மக்கள் ஆளை மாற்ற தீர்மானித்தனர் என்றே கொள்ளவேண்டி உள்ளது. இன்னும் ஒரு விடயம் முக்கியமானது. பொது வேட்பாளருக்கு பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வடக்கு கிழக்கு மக்கள் அளித்த வாக்குகள் சுமந்திரனின் சஜித் ஆதரவு அரசியல் நிலைப்பாட்டிற்கான எதிர்ப்புக் காட்டலாக அமைந்த மிகப்பிந்திய வெளிப்பாடு எனக் கூறமுடியும்.

இன்றைய பாராளுமன்ற சூழலில் அரசியல் அமைப்பு திருத்தம், அல்லது புதிய அரசியலமைப்பு விடயத்தில் சுமந்திரன் பாரிய பாத்திரம் எதையும் வகிக்கும் நிலை அசாத்தியமானது. சுமந்திரன் தனித்து மட்டும் அல்ல ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய கட்சிகளும் இதில் தாக்கம் செலுத்த வாய்ப்பில்லை. எப்படி கதிரை எண்ணிக்கையை கொண்டு சுமந்திரன் கணக்கு பார்த்து மகிழ்ச்சி அடைந்தாலும் தமிழ்த்தேசிய அரசியலின் பலவீனம் வெளிச்சமானது. அரசியல் அமைப்பு தொடர்பான முடிவுகள் என்.பி.பி., தென்னிலங்கை கட்சிகள், பௌத்த மத பீடங்கள் என்பனவற்றால் எடுக்கப்பட வேண்டியவையாகவே இருக்கப் போகின்றன. பின்னர் பெரும்பான்மை சிங்கள மக்களால் நிராகரிக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பால் வடிகட்டப்படவுள்ளன. வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் என்.பி.பி.க்கு தமிழ், முஸ்லீம் மக்கள் அளித்துள்ள வாக்குகள் சிறுபான்மை தரப்புக்களை விடவும் பெரும்பான்மைக்கே அதிகம் பயன்படப் போகிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத தாக இருந்தாலும் அதற்கு கை உயர்த்துவதைத் தவிர வடக்கு கிழக்கு, மலையக தமிழ், முஸ்லீம் என்.பி.பி எம்.பி.களுக்கு வேறு வாய்ப் பில்லை. இது சுமந்திரன் பாராளு மன்றத்தில் இருப்பதனால் மாறப்போவதில்லை.


என்.பி.பி. 159 எம்.பி.க்களை தனியாக கொண்டிருப்பினும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கான சாதகமான உரிமைகளை வழங்குவதில் அது தனித்து செயற்படப் போவதில்லை. தமிழ்த்தேசியம் எதைக் கேட்பார்கள் என்பதும் என்.பி.பி.க்கும், தென்னிலங்கை கட்சிகளுக்கும் தெரியாததல்ல. இலங்கை பாராளுமன்றம் 75 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கைகள் அரைத்த மாவாக திருப்பி திருப்பி அரைக்கப்பட்டு வந்துள்ளன. புதிய அரசியல் அமைப்பு தமிழ்த்தேசிய நிலைப்பாட்டிற்கு முரணாக சிங்கள பௌத்த இன, மத தேசியத்தின் பாதுகாவலராகவே அமையப் போகிறது. அதற்கு முன்னர் உள்ளூராட்சி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் என்.பி.பி. தனது ஆட்சியை நிலை நிறுத்த முயற்சிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. முடிவுகளை மக்கள் ஆணையாகக் காட்டி அதற்கேற்ப சில திருத்தங்கள், சீர்திருத்தங்கள் புதிய அரசியல் அமைப்பூடாக செய்வதற்கான வாய்ப்பே அதிகமாக இருக்கிறது. இதனால் சிலர் பேசுவது போன்று சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் தமிழ்த்தேசியத்திற்கு இழப்பும் இல்லை. என்.பி.பி.க்கு இலாபமும் இல்லை.

வேண்டுமானால் சுமந்திரன் இல்லாத பாராளுமன்றம் தமிழ்த்தேசிய தனி நபர் தரப்பில் யாருக்கு பலம், பலவீனம் என்று பார்த்தால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு வழியில் குறுக்கே கிடந்த பறாங் கல் ஒன்றை யாழ்ப்பாண மக்கள் நெம்புகோல் கொண்டு அகற்றி வழியை துப்புரவு செய்திருக்கிறார்கள். இது பாராளுமன்றத்தை சுத்திகரியுங்கள் என்ற என்.பி.பி .யின் அறைகூவலாக ஏன் இருக்க முடியாது. மக்களின் சுத்திகரிப்பில் சுமந்திரன் தோற்க என்.பி.பி.யில் மூவர் வெற்றி பெற்றுள்ளனர். சுமந்திரன் இல்லாத பாராளுமன்றத்தில் சிவஞானம் சிறிதரனின் கை பாராளுமன்ற குழுவில் ஓங்கியிருக்கிறது. இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு சுமந்திரன் இல்லாதது சில சந்தர்ப்பங்களில் ஒரு கை இழப்பாகவும், சில சந்தர்ப்பங்களில் ஒரு தொல்லை குறைந்ததாகவும், சுயமாக சிந்தித்து செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமையலாம்.


ஆனால்! ஆனால்! பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் விருப்த் தேர்வில் இரண்டாவது இடத்தில் உள்ள சுமந்திரன், தனது கையாள் சத்தியலிங்கத்தை தேசிய பட்டியில் பாராளுமன்றம் அனுப்பியுள்ள சுமந்திரன், அவரது வார்த்தைகளில் கூறிய மக்கள் தீர்ப்பை ஏற்று சும்மா இருப்பாரா……?

யாழ்ப்பாண மக்கள் ஏற்படுத்திய மாற்றத்தை தொடர்ந்தும் ஏற்பாரா....? அல்லது அவர்களை ஏமாற்றுவாரா? சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப் போகிறார், சத்தியலிங்கம் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப் போகிறார் என்ற கதைகள் சுமந்திரனின் ஆதரவாளர்களாலேயே கட்டி விடப்படுகின்றன என்று சிறீதரன் ஆதரவு அணியினர் கூறுகின்றனர். மாடில்லாமல் இந்த மணியோசை கேட்கவில்லை!


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வீட்டில் நிம்மதியான நிலை காணப்படும். நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். தொழிலில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகளை இப்போது செய்யலாம். சிலர் உங்களை பார்த்து பொறாமையாக நினைப்பார்கள். குடும்பத்தில் பிரச்சனைகள் ஏதும் இராது. நல்ல சுபிட்ஷமும் சௌபாக்கியமும் உண்டாகும். உடன் பிறந்தோர் உற்ற துணையாக இருப்பர். கணவன் மனைவிடையே அன்பு காணப்படும்..





ரிஸபராசி அன்பர்களே! முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். தொழில், வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் அதிக நஷ்டம் இல்லாமல் இருக்கும். வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீரகள். அதிக முதலீடுகளை செய்யாமல் இருப்பது அவசியம். குடும்பத்தில் முக்கிய நபர்களின் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்ளுங்கள். பொருளாதார விஷயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி உண்டாகும்





மிதுனராசி அன்பர்களே! மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்ததை பெறுவீர்கள். தொழிலில் நல்ல லாபம் உண்டாகும். சிலர் கடினமாக உழைத்து வெற்றி பெறுவர். முக்கிய நபர்களை இந்த வாரம் சந்திக்க வெற்றி உண்டாகும். குடும்பத்தில் கணவன்.மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும், நீங்கள் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அதை சமாளிக்கலாம். உங்களிடம் வாக்கு வாதத்திற்கு குடும்பத்தினர் வரலாம்.





கடகராசி அன்பர்களே! மனதில் தெளிவு உண்டாகும். மன நிம்மதி பெற தியானம் செய்யுங்கள். தொழிலில் உங்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட்டு எந்த தடையும் இல்லாமல் தொழில் அபிவிருத்தி இருக்கும். நல்ல லாபத்தையும் பார்க்கலாம். முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரால் சிறு பிரச்சனைகளுக்கு கூட டென்ஷன் ஆவீர்கள். சிலருக்கு அலர்ஜி தொந்தரவுகள் வந்து நீங்கும். உடன்பிறந்தோர் உறு துணையாக இருப்பார்கள்





சிம்மராசி அன்பர்களே! சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். தேங்கிய பொருட்கள் எல்லாம் விற்பனையாகி விடும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமையில் சிறு சங்கடங்கள் வந்து விலகும். மனைவியின் உடல்நலத்தில் தகுந்த கவனம் தேவை. வீடு மனை வாகன வகைகளில் திருப்தியான நடைமுறைகள் இருக்கும். கடந்த காலங்களில் இருந்த நிலைகள் மாறி மனதிற்கு மகிழ்ச்சி தரும்




கன்னிராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை சற்று ஒத்திப் போடுவது நல்லது. நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல செய்திகள் வரவில்லை என்ற கவலை வேண்டாம். கூடிய விரைவில் உங்கள் காதுகளை அது எட்டும். தொழிலைப் பொறுத்தவரை பிரச்னைகள் வந்தாலும் அது உங்களை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது நிறுவனத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாக முடியும்.





துலாம்ராசி அன்பர்களே! வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பாக்கிகள் அனைத்தும் கிடைக்கும்.தேவைப்படும் இடங்களில் இருந்து உதவிகள் கிடைக்கப் பெற்று மகிழுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். உற்றார், உறவினர்களுடன் விருந்து கேளிக்கைகளுக்கு சென்று வருவீர்கள். நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும். திருமண வயதிலுள்ள அன்பர்களுக்கு நல்ல வரன் அமையக்கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உள்ளது





விருசிசிகராசி அன்பர்களே! அனைத்து விஷயங்களிலும் நம்பிக்கையோடு செயல்படுவீர்கள். பயணங்களின்போது உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாத்து கொள்ளவும். தொழிலில் நல்ல லாபமும் முன்னேற்றமும் இருக்கும். புதிதாக தொழில் துவங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். குடும்பத்தில் சில விவாதங்கள் வந்து போகலாம். பிள்ளைகளின் விஷயத்தில் கவலை வேண்டாம். இருக்கும் இடத்தில் இருப்பது அதிக நன்மை.








தனுசுராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். கைக்கு வராது என்றிருந்த பணம் கூட கைக்கு வந்து சேரும். உடலில் இருந்து வந்த பிரச்சனைகள் அகலும். தொழிலில் வருமானம் நல்லபடியாக இருந்தும் வீண் செலவுகள் ஏற்படுவதால் மனம் கவலையில் இருக்கும். குடும்ப ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ முக்கிய முடிவுகள் எடுக்க சற்று கஷ்டப்பட வேண்டி இருக்கும். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை நிலவும்.




மகரராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முடிவில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. நீங்கள் நடந்து கொள்ளும் விதம் சிலருக்கு புதிராக இருக்கும். தொழிலில் நல்ல அபிவிருத்தி உண்டாகும். புதிய தொழிலில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குதாரர்களுடன் சிறு வாக்கு வாதங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் பணவரவிற்கு குறைவிருக்காது. உடல் நிலையில் அவ்வப் போது தொந்தரவுகள் வருவதை தவிர உங்களுக்கு நன்மையே நடக்கும்.




கும்பராசி அன்பர்களே! பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது அவசியம். கோபுர தரிசனம் உங்களுக்கு கை கொடுக்கும். வேலை பார்க்கும் இடத்தில் பிரச்னைகள் எழலாம். கவனமுடன் இருப்பது மிக முக்கியம். உடன் பணிபுரிபவர்கள் உற்ற துணையாக இருப்பார்கள். தொழிலில் உன்னத நிலை ஏற்படும். குடும்பத்தினருடன் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். குடும்பத்தார் ஒன்று சேர்வார்கள்.




மீனராசி அன்பர்களே! தேவையில்லாத பிரச்னைகளை சந்திப்பீர்கள். சிறு சிறு உடல் உபாதைகளால் அவதிப்பட நேரலாம். ஆதலால் மனசோர்வும் உண்டாகலாம். செலவுகள் ஏற்படும் நேரம். புதிய தொழில் துவங்குவது இருக்கும் தொழிலை விரிவுபடுத்துவது போன்ற அனைத்துமே செய்யலாம். குடும்பத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும். அனைத்து வசதி வாய்ப்புகளும் தாமாகவே வந்து சேரும். அரசு வேலைகளில் இருந்த தொய்வு நிலை மாறும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கஜனின் அழைப்பு

(15ம் பக்கத் தொடர்ச்சி) போல செயல்பட முடியாது. கட்சி போல செயல்படுவதென்றால் அல்லது தேர்தலில் நேரடியாக ஈடுபடுவது என்றால், அதற்குப் பலமான அரசியல் இயக்கம் தேவை. சிவில் சமூகங்களுக்கு ஊடாக தம்மை பலப்படுத்திக் கொண்டு கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு. அப்படிப்பட்டவர்கள் சிவில் சமூகங்களில் இருந்து விலகி கட்சிகளில் இணைந்து தான் தேர்தல் கேட்டார்கள். சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளாக தேர்தல் கேட்கவில்லை. எனவே இந்த இடத்தில் தெளிவான பிரிகோடு இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை ஏற்கனவே திரும்பத்திரும்பத் தெரிவித்திருந்தது.

இப்படிப்பட்டதோர் கட்சி மற்றும் சிவில் சமூகப் பின்னணிக்குள் தேர்தல் முடிந்த கையோடு கட்சிகளை ஒரு மேசையில் அமர்த்த சிவில் சமூகங்கள் எவையும் முயற்சிக்காத ஒரு வெற்றிடத்தில்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதாவது ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய முயற்சிகளுக்கு எதிராக காணப்பட்ட கட்சி,ஒரு புதிய ஐக்கிய முயற்சிக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் அந்த அழைப்பு வந்திருக்கலாம். அவர்களுக்கு நெருக்கமான சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஆலோசனையும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

எதுவாயினும் முன்னணியின் ஐக்கியத்துக்கு எதிரான முன்னைய நிலைப்பாடுகளை தூக்கிப் பிடிக்க இது நேரமல்ல. கஜேந்திரகுமாரின் அழைப்பு காலத்தின் தேவை. கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் கட்சிகளின் மீது செல்வாக்கை பிரயோகிக்கக்கூடிய மக்கள் அமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில், ஒரு கட்சியே முன்வந்து அந்த அழைப்பை விடுப்பது தவிர்க்கமுடியாதது.

இறந்த காலத்தில் இருந்து அக்கட்சி பாடங் கற்றிருப்பதை வரவேற்கலாம். ஒரு ரஷ்ய பழமொழி உண்டு கடவுளுக்கு உள்ள பிரதான பிரச்சனை என்னவென்றால், மனிதர்களை வைத்துத் தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருப்பது என்று. தமிழ் அரசியலுக்கும் அது பொருந்தும். இருக்கிற கட்சிகளை வைத்துச் சாத்தியமான ஐக்கியத்தைத் தான் கட்டியெழுப்பலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தோடு இருக்கும் என்பிபி அரசாங்கம் ஒரு தீர்வை நோக்கி முயற்சித்தால், அதை எதிர்கொள்ள அப்படியொரு சாத்தியமான ஒருங்கிணைவு அவசியம்.

# உள்ளக விசாரணைகள் மீதான நம்பிக்கை...

(4ம் பக்கத் தொடர்ச்சி) ஆகவே காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது கட்டாயமானது. சட்டத்தின் சார்பில் ஏதும் நியாயம் கிடைக்கவில்லை. கடந்த கால சம்பவங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இந்த அரசாங்கத்திலும் உயர்பதவிகளில் உள்ளதாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு விசாரணை கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

வழக்கு விசாரணைகள் தொடர்ந்து தாமதமடைந்துள்ளன. இவ்வாறான நிலையில் மக்கள் எவ்வாறு சட்டத்தின் மீது நம்பிக்கை கொள்வார்கள். சிறந்த மாற்றத்துடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஆகவே வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக காணாமல் போனோர் விவகாரத்துக்கு நிதி ஒதுக்கி பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வெற்றிக் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியாக செயற்பட்டவர்கள் தற்போது தாம் மக்கள் விடுதலை முன்னணி இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். தமிழர்களின் நம்பிக்கையையும் வெற்றிக் கொள்ள அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# கனேடிய தமிழர் பேரவையின் (CTC) இலங்கையின் வெள்ள நிவாரண முயற்சிகள்

கனடிய தமிழர் பேரவையின் மனிதநேய செயற்திட்டங்களின் இணைப்பாளர் திரு.துஷ்யந்தன் ஆர்.துரைரட்ணம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளீதரன் அவர்களை மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த நிலமைகளை மதிப்பிடுவதற்கும் வெள்ள நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கும் மாவட்ட செயலகத்தில் சந்தித்திருந்தார்.

இதன்பின்னர் மாவட்டச் செயலாளரின் அறிவுரை மற்றும் ஆலோசனையின் பேரில், மாவட்ட துணைச் செயலர் திருமதி.முகுந்தன் மற்றும் பிற அதிகாரிகளின் ஒருங்கி ணைப்புடன், பாதுகாப்பு மையங்களில் வசிக்கும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு 498 பால் பவுடர் பொதிகள் ஒதுக்கப்பட்டன.

தற்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் 37 பாதுகாப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு, வெள்ளத்தினால் இடம் பெயர்ந்த 4,879 நபர்களை உள்ளடக்கிய 1,753 குடும்பங்களுக்கு தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது.

நிவாரண முயற்சிகளின் முதல் கட்டமாக, நவம்பர் 29, 2024 வெள்ளிக்கிழமை, பின்வரும் நான்கு (4)DS பிரிவுகளில் உள்ள சிறு குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு பால் பவுடர் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன: ஏறாவூர் பற்று: 33 மண் முனை வடக்கு: 28 கோறளைப்பற்று: 89 மண்முனை தென் மேற்கு: 43

மட்டக்களப்பு மாவட்டத்தின் எஞ்சிய 10 DS பிரிவுகளுக்குள் அமைந்துள்ள பாதுகாப்பு நிலையங்களில் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் ஆதரவு கோரப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களுக்குள் இந்த கூடுதல் ஆதரவை வழங்குவதை உறுதி செய்ய, நீட் மையத்துடன் இணைந்து CTC செயற்படவுள்ளது

இந்த வெள்ள நிவாரண முயற்சிகள் எமது நன்கொடையாளர்களின் தாராள மனப்பான்மையால் மட்டுமே சாத்தியமானது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் பேரழிவால் பாதிக்கப்பட்ட மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நிவாரணப் படிகள் மேற்கொள்ளப்படும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com











# உதயங்க, கபில மீது தடை விதித்தது அமெரிக்கா

ரஸ்யாவிற்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்கவும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவும் குறிப்பிடத்தக்க ஊழலில் ஈடுபட்டனர் என தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு பயணத்தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது ஊழலிற்கு எதிரான சர்வதேச தினம் மற்றும் சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு உலகில் ஊழல் .மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்கின்றது.

குறிப்பிடத்தக்க ஊழல் ,பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என 14 பேர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை அமெரிக்கா இது தொடர்பிலான பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் வெளிநாட்டு செயல்பாடுகள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள் ஒதுக்கீட்டு சட்டத்தின் பிரிவு 7031 சியின் படி இவர்கள் அமெரிக்கா





விற்குள் நுழைவதற்கு தகுதியற்றவர்கள். மேலும் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பல கொள்கைகளிற்கு இணங்க மேலும் பலரிற்கு விசா கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அமெரிக்கா ஆராய்கின்றது.

இதேவேளை மிக் விமானம் மற்றும் எயா பஸ் கொள்வனவுகளில் இடம் பெற்ற மோசடிகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் உதயங்க வீரதுங்க, கபில சந்திரசேனவுக்கு வழங்கியுள்ள தீர்ப்பு ஏனைய மோசடியாளர்களுக்கும் சிறந்த பாடமாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்தின் உதவியுடன் ஊழலில் ஈடுபட்டோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு 10 டிசம்பர் 2024 செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது அமைச்ச ரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆட்சி காலங்களில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தாமதமாகும் மற்றும் கைவிடப்பட்ட விசாணைகளை மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் போது ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களின் கூச்சல்களுக்கு நாம் கீழ்படியப் போவதில்லை.

எமக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா? நாம் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டோமா என நாமல் ராஜபக்ஷ போன்றோர் அண்மையில் கேள்வியெழுப்பியிருந்தனர்.

உதயங்க வீரதுங்க, கபில சந்திரசேன போன்றோருக்கு தற்போது கிடைத்துள்ள தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டும் இவர்களால் தற்போது கேள்வியெழுப்ப முடியுமல்லவா?

எவ்வாறிருப்பினும் போதுமான கால அவகாசத்தை எடுத்து விசாரணைகளை முறையாக முன்னெடுத்து சட்ட நடவடிக்கை எடுப்போம்.

மிக் விமான கொள்வனவு மற்றும் எயா பஸ் கொள்வனவு என்பவற்றில் இடம் பெற்ற மோசடிகளை அடிப்படையாகக் கொண்டே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இவர்களுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

